மலர்ந்த ஜீவியம்

ஸ்ரீ அரவிந்தர் ஸ்ரீ அன்னை யோக மலர்

மார்ச் 2000 ஜீவியம் 5 மலர் 11

இம்மாத மலரில்..........

பொருளடக்கம்	பக்கம்
மனித சுபாவம்	2
இம்மாதச் செய்தி	21
லைப் டிவைன்	22
சாவித்ரி	30
வாழ்வின் மறுமொழி	33
பகவானுடைய இதர நூல்கள்	35
அஜெண்டா	37
லைப் டிவைன் - கருத்து	39
அன்பர் கடிதம்	42
இன்பமயமான சாதனை	44
பாதை புலப்பட்டது	54
பிரார்த்தனை பலிக்க வேண்டும்	61

❊ ❊ ❊

கதை, கட்டுரைகளில் வரும் பெயர்கள் யாரையும் குறிப்பிடுவன அல்ல.
வருட சந்தா ரூ.60/-

மனித சுபாவம் III

கர்மயோகி

சொன்னதையே திருப்பித் திருப்பிச் சொல்பவர், செய்ததையே திருப்பித் திருப்பிச் செய்பவர் அவற்றை நிறுத்த முயன்றால் அவருக்குப் பத்து மடங்கு முன்னேற்றம் காத்திருக்கும்.

⁕ ⁕ ⁕

செய்ததையே செய்வது எளிது. புதியதாகக் கற்பது சிரமம். எளியதை விட்டு சிரமமானதைக் கற்றால் பலன் பெரிதாகும். ஏன் ஒருவர் சொன்னதையே திரும்பத் திரும்பச் சொல்கிறார்? அவருக்கு அது இன்னும் புரியவில்லை என்று பொருள். புரிந்துவிட்டால் சொல்வதை நிறுத்திக் கொள்வார். புரிய அவர் சொல்வதைச் செய்ய வேண்டும். கடமையைச் செய்யாதவர், திரும்பத் திரும்பச் சொல்வார். செய்துவிட்டால் முன்னேற்றம் ஏற்படும். சொல்வதை நிறுத்திக் கொள்வார். முயன்று நிறுத்தினால் செய்ய முடியும். பத்துமடங்கு பலன் கிடைக்கும்.

எங்கெங்கு முடியுமோ அங்கங்கெல்லாம் கத்தரிக்கோல், ஸ்கேல் போன்ற கருவிகளைத் தவறாமல் பயன் படுத்துவது நல்லது.

⁕ ⁕ ⁕

கத்தரிக்கோலால் வெட்டுவதைப்போல் பேப்பரைக் கையால் கிழிக்க முடியாது. கருவியைப் பயன்படுத்துவது சிறந்த முறை. பலன் பல மடங்குண்டு. பொதுவாக இதுபோன்ற கருவிகளைப் பயன்படுத்த ஆரம்பித்த பின் நம் திறமை பல மடங்கு உயர்வதைக் காணலாம். ஸ்கேலில்லாமல் நேர் கோடு போட முயன்று, பேப்பர் விரயமாகும்.

ஆயில் கேன் இல்லாமல் சைக்கிளுக்கு எண்ணெய் போட்டால் தரையும், வேஷ்டியும் அபிஷேகமாகும். எதையும் அதற்குரிய கருவியிருக்கும் பொழுது அதைப் பயன்படுத்தும் பழக்கம் நல்லது.

உனக்குள்ள பழக்கங்களை அதிகப்படுத்தும் வாயி லாகப் புதிய நல்ல பழக்கங்களை அவ்வப்பொழுது சேர்த்துக் கொள்ள வேண்டும். வற்புறுத்திச் செய்வது சரியில்லை. உன் திறமையின் அளவை ஒரு நிலை உயர்த்தும்படிச் செயல்பட வேண்டும்.

⁕ ⁕ ⁕

மனப்பாடம் செய்வது ஒரு பழக்கம். கடிகாரம் ரிப்பேர் செய்வது ஒன்று. **Punctuality** குறித்த நேரத்தில் செயல்படுவது அடுத்தது. நமக்கு இதுபோல் சில நல்ல பழக்கங்களுண்டு. மேலும் ஒரு நல்ல பழக்கத்தைச் சில மாதங்களுக்கு ஒன்றாகச் சேர்ப்பது நல்லது. அது மிகச் சிரமம். என்றாலும் அதிகப் பயன் தரும். புத்தகம் படிக்கிறோம். பேப்பரில் நல்ல செய்தி வருகிறது. ரசிக்கிறோம். ஒரு வருஷத்திற்குப் பின் மறந்து போகும். நினைவிருந்தால் எங்கு படித்தோம் என்று நினைவிருக்காது. அவற்றைக் குறித்து வைப்பது ஒரு நல்ல பழக்கம். இதுபோன்ற நல்ல பழக்கங்கள் பலவற்றை இந்நூலில் குறிப்பிட்டுள் ளேன். இரண்டு மாதத்திற்கு ஒரு முறை ஒரு புதிய நல்ல பழக்கத்தை நாம் சேர்த்துக் கொண்டால், நம் வாழ்வு நிலை உயரும்.

பழக்கத்திற்காகவே, பயனில்லாமல், செய்யும் காரியங்களைக் கண்டு விலக்க வேண்டும்.

⁕ ⁕ ⁕

பக்தியோடு பூஜை செய்ய ஆரம்பித்தவர்கள் கொஞ்சநாள் கழித்து தமக்கு இப்பொழுதெல்லாம் முன்போல் பக்தியில்லை என அறிவதுண்டு. அதன் பின் வெறும் பழக்கமாகப் பூஜை செய்தால், பூஜைக்குப் பலனில்லாதது மட்டுமன்று, தவறான பலன் ஏற்படும்.

சர்வீஸிலிருக்கும்வரை ஆபீஸுக்குப் போனோம். ரிடையர் ஆனபின், ஆபீசுக்கு ஒரு முறை போகலாம், தொடர்ந்து போகக் கூடாது. போனால் மரியாதை போகும். அதை எவரும் செய்ய மாட்டார்கள். ஆனால் பக்தி போன பின் பூஜை செய்வதை நிறுத்த மாட்டார்கள். அதன் பலன் மனதில் வெறுப்பு ஏற்படும். எதையும் நம்பமுடியாமற் போகும். மனநிலையால் சரிந்து கீழே வருவோம். இன்றைய சடங்குகளில் பெரும்பாலும் அத்தகையது. ஒருவர் இறந்தால் அவர் ஆவி சாந்தியடையச் செய்யும் சடங்குகள் சக்தியுள்ளவை. அவசியமானவை. ஆனால் காது குத்துவது அப்படியில்லை. மஞ்சள் நீர் சுபச்சடங்கு, திருமணம் சம்பந்தமான வரிசை, சீர், அலங்காரம் சமூக அந்தஸ்திற்காகவும், மனத்திருப்திக்காகவும் செய்வன. ஆதி நாளில் என்ன பலன் கருதி பெற்றோருக்குப் பாத பூஜை செய்தார்களோ, அது இன்று இல்லை. உபநயனம், பிரம்மோபதேசம் என்பவை பிரம்மத்தை உபதேசம் செய்யும் ஆன்மீகத் திறனுள்ளவர்கள் செய்யக்கூடியது. பெற்றோர் என்பதனால் செய்ய முடியாது. வெறும் பெற்றோர் செய்யும் “பிரம்மோபதேசம்” எதிரான பலன் தரும். பையன் அளவு கடந்து பொய் சொல்வான். இன்ஜீனியர் மகன் இன்ஜீனியர் படிக்காமல் **B.E.** பட்டத்தைப் போட்டுக் கொண்டால் ஜெயிலுக்குப் போவான். யாரும் அவனை ஜெயிலுக்கு அனுப்பாவிட்டால், அவன் கட்ட முயலும் முதற் கட்டிடம் அவனைத் திவாலாக்கும். **For courtesy sake** என்று **courtesy** இல்லாமல் செயல்பட்டால் நம் வாழ்வை விட்டே **courtesy** போகும். இவை எப்படிப்பட்ட பாதகம் விளைவிக்கின்றன என நாம் அறிவதில்லை. அவற்றை எல்லாம் அறவே ஒழிக்க வேண்டும். சடங்குகளை விட்டாலும், சமூகத்தில் இவைபோன்ற (**dead habits**) பயனற்ற பழக்கங்கள் ஏராளம்.

உன் குணத்தை நீ அறிவாய் என்பதால், அதிலுள்ள குறைகளை வரிசையாக எழுதி, அனைத்தையும் விலக்க முயலுதல் அவசியம்.

❉ ❉ ❉

கெட்டிக்கார மாணவன் படிப்பை அலட்சியம் செய்தாலும் பெயிலாக மாட்டான். பணக்காரன் அதிகச் செலவு செய்தால் நஷ்டம் வாராது, என்றாலும் இவை நல்லதல்ல. ஏற்கனவே 43 மார்க் வாங்க ஒரு நாளைக்கு 10 மணி நேரம் படித்தவன் படிப்பை அலட்சியம் செய்தால், குடும்பச் செலவுக்குப் போதுமான வருமானமில்லாதவர் ஆடம்பரச் செலவு செய்தால் அது நம்மை சுடச்சுடப் பாதிக்கும். இங்கு நான் குறிப்பிடுவது அது போன்ற குணங்களே, குணக்கேடுகளே.

நாம் நம்மை அறிவதால், எந்தக் குறைகள் நம்மை அதிகமாகப் பாதிக்கும் என்றும் தெரியுமாதலால், அவற்றை விலக்க முழுமுயற்சி எடுக்க வேண்டும்.

பிறருக்கு உதவி செய்வதையே இலட்சியமாகக் கொண்டு, ஒரு முறை பெரு நஷ்டம், அடுத்த முறை கோர்ட் கேஸ், மூன்றாம் முறை அடிதடி வழக்கு என அனுபவித்தவர், பிறருக்கு உதவுவதைத் தவிர்க்க முன் வருதல் அத்தியாவசியம்.

முன் கோபத்தால் முதல் மனைவி தாய் வீட்டிற்குப் போய் விட்டாள். ஆபீஸில் பிரமோஷன் இல்லை. குடியிருக்கும் வீட்டுக்காரர் கெடுபிடி செய்து காலி செய்யச் சொன்னார் எனில் அவருக்கு முன்கோபம் கூடவே கூடாது.

கேட்கும்பொழுது இல்லை என்று சொல்ல முடியாமல் மருமகப் பிள்ளைக்கு ரிடையரான பொழுது வந்த எல்லாத் தொகையையும் கொடுத்துவிட்டு நிரபராதியானவர், பரீட்சை கேள்வித்தாளில் உள்ள கேள்வி எது என்று கேட்ட நண்பரிடம் முகம் சுளிக்கக் கூடாது எனச் சொல்லி கல்லூரியில் நடவடிக்கை எடுக்கும் அளவுக்கு வந்தது என்றவர், யாராவது ஏதாவது கேட்டால், “பிறகு பதில் சொல்கிறேன்” என்று தம் குணத்தை மாற்றிக் கொள்வது அவசியம்.

கடன் என்று வாங்கினால், திருப்பிக் கொடுத்துப் பழக்கமில்லாதவர், இனி கடன் வாங்குவதில்லை என முடிவு செய்ய வேண்டும்.

எவருக்கும் தம்மைப் பாதிக்கும் குணங்கள் நன்றாகத் தெரியும். அவற்றை விட முடியாது என்று பேச மாட்டார்கள். முயன்றால் பெரும்பாலும் கட்டுப்படும். முழு முயற்சியால் பூரணப் பலன் ஏற்படும். அதை அனைவரும் செய்ய முன்வரவேண்டும்.

நீ செய்வதெல்லாம் ஒரே குழப்பமும், குழறுபடியாகவு மிருந்தால், சிஸ்டத்தைக் கொண்டு வரச் செய்யும் சிறு முயற்சி, பெரும் பலனைத் தரும்.

❊ ❊ ❊

இதேபோன்ற குணமுள்ள 8 பேருள்ள வீடு எப்படியிருக்கும் எனக் கற்பனை செய்ய முடியும். அதுவும் வெளியூர்ப் பிரயாணத்தன்று, ஒரே அமளி, கூச்சல், குழப்பம், சண்டை. இதே வீட்டில் அன்று காலை ஒருவர், யார் யார் எதைச் செய்வது எந்த (order) முறையில் செய்வது என்பதை ஏற்பாடு செய்தால் கூச்சல், அமளி, எரிச்சல் எல்லாம் பெரும்பாலும் இருக்கா. இது சிஸ்டத்திற்குரிய சக்தி. சிறுமுயற்சிக்குப் பெரும்பலனைப் பெற்றுத் தருவது சிஸ்டம் (system).

மறதியுள்ளவரானால், ஒரு பட்டியல் (checklist) மறதியின் பலனை அழிக்க வல்லது.

❊ ❊ ❊

மறதியால் விளைந்த பலன்களை நினைத்துப் பார்த்தாலும் நம்ப முடியாது. பர்ஸை வீட்டில் வைத்துவிட்டு வெளியூர் போய் பட்ட அவதியை நினைத்தாலும் மனம் நடுங்கும். வட நாட்டுக்கு உல்லாசப் பிரயாணம் போன சமயத்தில் பஸ் புறப்படும் பொழுது ஒருவரை விட்டு விட்டு அடுத்த ஊர் வந்த பிறகு பிரயாணம் சிம்ம சொப்பனமானது ஒருவருடைய அனுபவம். ஹாஸ்டலுக்குப் போய் சாவியை வீட்டில் வைத்துவிட்டு வந்து, பூட்டை உடைத்துத் திறப்பதே வழக்க மானவருண்டு. வெளிநாட்டில் பாஸ்போர்ட் வைத்த இடம் தெரியாமல் தேடியவர் நிலையை நினைக்கவே பயமாயிருக்கிறது. பெரிய

தொகைக்கு அக்ரிமெண்ட் எழுதி கையெழுத்திட்ட பின், முக்கிய நிபந்தனையைச் சேர்க்காதது நினைவு வந்து என்ன பயன்? கோர்ட்டில் கூண்டில் நிற்கும்பொழுது மறதி என்ன செய்யும்? சொத்தையே அழிக்கும்.

Checklist (பட்டியல்) என்பது லாரி டிரைவர், முதற் கொண்டு அனைவரும் பயன்படுத்துவது. இதைப் பயன்படுத்தினால் சாவி மறக்காது, பாஸ்போர்ட் தொலையாது, அக்ரிமெண்ட்டில் நிபந்தனை விட்டுப் போகாது. டூர் போனால் மீண்டும் வந்த பிறகு, தலையை எண்ணும் பழக்கம் ஒருவரை விட்டுவிட்டு வாராது. சிறிய முறை, பெரிய பலன்.

ரிகார்ட், ரிஜிஸ்டர் தற்போதில்லா இடங்களில் ஏற்படுத்தினால், அது பயன்படும், பெரும்பலன் தரும். ஆபத்தான நேரத்தில் அற்புதமான உதவி செய்யும்.

❊ ❊ ❊

எதையும் படித்துவிட்டுப் போட்டு விடும் வீட்டில், ஒருவருக்கு முக்கியமான ரசீதுகளை ஒரு நோட்டில் வைத்து பெட்டியடியில் வைக்கும் பழக்கம் இருந்தது. நெருங்கிய நண்பரிடம் சொத்து வாங்கி, பணம் கொடுத்து, வாய்மொழியாக 12 வருஷம் அனுபவித்த பின் "நெருங்கிய" நண்பருக்கு, தாம் பணத்திற்கு ரசீது கொடுக்காதது நினைவு வந்தது. அத்துடன் ஆசையும் வந்தது. பொய்யும் சொல்ல மனம் இசைந்தது. வாங்கிய பணத்தை மறைத்து, சொத்தைத் திரும்பக் கேட்டு, பொய்க் கேசும் போட்டுவிட்டார். நண்பர் கவலைப்படவில்லை. நண்பரின் மனைவிக்கு அஸ்திவாரமே போனது போலாயிற்று. கேஸுக்குப் பதில் நோட்டீஸ் எடுபடாது. திடீரென ஒரு யோசனை தோன்றியது. பெட்டிக்கு அடியில் உள்ள அந்த நோட்டை எடுத்துப் பார்த்தார்கள். வழக்கப்படி நோட்டு தன் சேவையைச் செய்திருந்தது. பத்து வருஷம் முன்பு பணம் பெற்றவுடன் நண்பர் எழுதிய கடிதத்தில் அதைக் குறிப்பிட்டிருந்தார். ரசீது இல்லை என்பதால் இக்கடிதம்

முக்கியமானது என நினைத்து ஒருவர் அதை நோட்டில் வைத்திருந்தார். கடிதம் கேஸை ஜெயித்துக் கொடுத்தது.

வேண்டாம் என விலக்கியதை மீண்டும் நாடாதே. இதை ஏற்றால் காரியம் முடிந்தவுடன் மனிதனை மறக்கும் பழக்கம் போய்விடும்.

* * *

வீராப்புக்கே ஊரில் பேர் போனவர் ஒருவர். வாழ்க்கையிலில்லாத உதவியை ஒருவரிடம் நாடினார். உதவி முடிந்த மறுநாள் இதுவரை இருந்த மரியாதையை மாற்றி வீராப்புக்காரராகப் பேசினார். மூன்று மாதத்தில் நிலைமை மாறி மீண்டும் அவர் உதவி தேவைப்பட்டது. பல்லிளித்துக் கொண்டு உதவியை மீண்டும் நாடினார். விலக்கியதை நாடாத குணமிருந்தால், வேலை முடிந்தவுடன் நண்பரை எட்டி வீசியிருக்க மாட்டார்.

ஒரு காரியத்தை நல்லபடியாக முடித்தவுடன், இக்காரியம் முடிய உதவிய நம்பிக்கை எது என்று கண்டு கொள்ள முயல்வது சரி.

* * *

காரியம் கெட்டுப் போனால் எப்படிக் கெட்டது எனச் சிந்திக்கின்றோம். கூடி வந்தால் அதுபோல் சிந்திப்பதில்லை. எவரும் எதிர்பாராததுபோல் கூடிவந்தால், சிந்திப்பதுண்டு.

இந்தச் சிந்தனை மனத்தெளிவைக் கொடுக்கும். ''நான் கல்லூரிக்கு 13 நாள்தான் போனேன். இரண்டாண்டு விரயமாயிற்று. மீண்டும் சேர்ந்த பொழுது, பாடபுத்தகம் தவிர மற்ற புத்தகங்களை ஏராளமாகப் படித்தேன். ஆனால் பரிட்சை பாஸாகி விட்டது. பட்டம் கிடைத்தது. என்னையறிந்தவர் எவரும் நான் பாஸ் செய்வேன் என நம்பவில்லை'' என்ற நிலையில் ஒருவர் எப்படிப் பாஸ் செய்தோம் என யோசனை செய்தால், அவருள்ள நிலையில் பல விஷயங்கள் புரியும். அவற்றுள் ஒன்று இவருக்குப் பாஸைப் பெற்றுத் தந்திருக்கும். அது எது என்று விளங்கினால், அது ஞானமாகப் பயன்படும்.

- நான் படித்த ஏராளமான புத்தகங்கள் பரிட்சையில் மறைமுகமாகப் பலனளித்தன.
- இதுவரை நான் பரிட்சை எழுதி, தவறியதேயில்லை. அதனால் பாஸ் செய்தேன்.
- நான் மேற்கொண்ட எக்காரியமும் பழுதானதில்லை, அதனால் இது நடந்தது.
- மாணவருலகத்திற்குச் செய்த சேவை பலன் தந்தது.
- நாட்டு விடுதலைக்காகச் செய்த தியாகம் பலன் கொடுத்தது.
- பாஸ் செய்வேன் எனத் தாயாருக்குக் கொடுத்த வாக்கு, காப்பாற்றியது.
- குடும்பத்தின் மீதுள்ள கடமையுணர்வு பாஸை வரவழைத்தது.

போன்றவை அவர் மனதில் தோன்றின. முடிவாக அவருக்கு உண்மையை உணர்த்தியது ஒன்று. கல்லூரியிலிருக்கும் பொழுது வகுப்பில் கேட்டதை மனதில் பதியவைக்கும் பழக்கம் அவருக்குண்டு. எப்படியும் பாஸாக வேண்டும் என்ற எண்ணம் வகுப்பறையில் கூர்மையான கவனத்தை அளித்தது. கடமையுணர்ச்சி, எதிலும் தவறாத பாங்கு, கூர்மையான கவனத்தின் மூலம் பாஸைப் பெற்றுக் கொடுத்திருக்கிறது என்று விளங்கியது. இதன் மூலம் மாணவர் தம்மையறிய முடிகிறது. தன்னை அறிவது நிகரில்லாத ஞானம்.

சிறிய மனிதர் மீது அதிகாரம் செலுத்துவதையும், பெருமைக்கு உரியவருக்குச் சுதந்திரம் அளிப்பதையும் சட்டமாகக் கொள். அதையும் மனத்தால் செய்தால் பலன் அதிகம்.

* * *

சிறிய புத்தியுள்ளவர் சிறிய மனிதர். நல்ல குணமுள்ளவர் பெரியவர்கள். வயதால், பணத்தால் கருதுவதைவிட, குணத்தால் மனிதரைச் சிறியவர், பெரியவர் எனப் பிரிக்க வேண்டும். சிறியவர் மீது அதிகாரம் செலுத்தாவிட்டால் காரியம் கெட்டுவிடும். நல்ல குணமுள்ளவர்க்குச் சுதந்திரம் கொடுத்தால் அவர்கள் மலர்ந்து பெரிய உதவியைச் செய்வார்கள்.

நண்பன் என்பதால் எதையும் கேட்பவனுக்கு இடம் கொடுத்தால் காரியம் கெடும். குமாஸ்தாவானாலும் உதவி கேட்க முடியாதவரெனில் அவருக்குச் சுதந்திரமும் அதிகாரமும் கொடுத்தால், மானேஜர் சேவையைச் செய்வார். இதை மனத்தளவில் செய்தால் பலன் அதிகம்.

எந்த வகையிலாவது ஒருவருக்கு முக்கியத்துவமிருந்தால் அவருடன் பழகும் பொழுது யோசனை செய்து பேச வேண்டும்.

❋ ❋ ❋

இளைஞர்கள் இருவர். சேவா உணர்ச்சியுடன் தங்கள் தாய் ஸ்தாபனத்திற்குச் சேவை செய்யும் முயற்சியில் இறங்கினார்கள். ஏராளமான பேருள்ள பெரிய ஸ்தாபனத்தில் ஆயிரம் போட்டியிருப்பதை இவர்கள் முக்கியமாகக் கருதவில்லை. யாருக்கு உதவி செய்யப் போனார்களோ, அவர்கள் உதவியைப் பெற்றுக் கொண்டதுடன், இளைஞர்கள் திறமையைக் கண்டு பொறாமைப்பட்டு. வம்பு வளர்த்து, பொய்க் கேஸ் போட்டார்கள். இளைஞர்கள் பிரமித்தனர். ஆனால் அறிவு வரவில்லை. ஸ்தாபனத் தலைமையிலுள்ளவர்கள் அனைவரும் சிறிய புத்திக்காரர்கள் என அறியாமல், அவர்களில் ஒரு முக்கியஸ்தரை அணுகி, மத்தியஸ்தம் செய்யும்படிக் கேட்டார்கள். அவர் தவறாகப் பேசினார். இளைஞர்கள் விலகிவிட்டனர். உதவி செய்யாவிட்டாலும், அவருக்குத் தம் சொல்லை ஏற்கவில்லை எனக் கோபம் வந்தது. எதிர்க்கட்சிக்கு ஆதரவளித்து 10 வருஷம் உயிரையே எடுத்தார்.

முக்கியமானவர் என்றால் நியாயமாக இருப்பார் என எதிர்பார்க்கிறோம். எதிராக மாறும் சின்னபுத்தியுடையவரானால், அவரால் பெரிய உபத்திரவம் செய்ய முடியும்.

பிறர் நமக்குக் கடமைப்பட்டவர் என நினைக்கும் பொழுது, சற்று நிதானித்து அது எந்த அளவு உண்மை எனச் சிந்திக்க வேண்டும். சில சமயங்களில் அவருக்குக் கடமைப்பட்டவராகவுமிருப்போம்.

❋ ❋ ❋

இன்ஜீனியருக்குத் தம் பெயரைப் பயன்படுத்தி யாரோ ஒருவர் ஏராளமான பீஸ் பெற்றது தாங்கவில்லை. பீஸ் பெருந்தொகை எனக் கேள்விப்பட்டுப் பொங்கி எழுந்தார். நேரடியாகத் தம்மை ஏமாற்றியவரைக் கண்டு பீஸைக் கொடுக்கும்படிக் கேட்க வேண்டும் என்று கொந்தளித்து எழுந்து, அவரைச் சந்தித்தார்.

“என் பெயரைச் சொல்லி **thermal station** அனல் மின் நிலையத்தில் எவ்வளவு பீஸ் பெற்றீர்கள்” எனக் கோபாவேசமாகக் கேட்டார்.

நண்பருக்கு அதிர்ச்சியாயிற்று. இவர் ஆங்கிலேயர். இவர் என்ன இன்ஜீனியர் எனவும் அவருக்குத் தெரியாது. சேவையை மேற்கொண்டு இங்கிலாந்தை விட்டு வந்தவருக்கு மிஞ்சியது பட்டினிதான். இவரை யாரோ கிளப்பிவிட்டிருக்கிறார்கள் எனவும் புரிந்தது. தமக்கெழுந்த கோபத்தை அடக்கிக் கொண்டு நண்பர் கேட்டார். “மின் நிலையத்திற்கு நீங்கள் எப்படி வந்தீர்கள் என நினைவிருக்கிறதா? உங்களை வரும்படி அழைத்தது நானா, என் நண்பனா, அவர் தகப்பனாரா?” இன்ஜீனியருக்குச் சற்று சுயநினைவு வந்தது. “நீங்கள் யாரும் அழைக்கவில்லை”.

நண்பர் : “பின் எப்படி வந்தீர்கள்?”

இன்ஜீனியர் : “நானே வருவதாகக் கேட்டேன்”.

நண்பர் : “மின்நிலையச் சூப்ரின்டெண்டண்ட் உங்கள் உதவியைக் கேட்டாரா?”

இன்ஜினியர் : “இல்லை”

நண்பர் : “நீங்கள் சூப்ரின்டெண்டண்ட்டுடன் பேசும்பொழுது நாங்கள் வேறிடம் போனது நினைவிருக்கிறதா?”

இன்ஜினியர் : “ஆம்”

நண்பர் : “எப்படி நம் வீட்டிற்கு நீங்கள் வந்தீர்கள் எனத் தெரியுமா?”

இன்ஜினியர் : “உடல் நலம் குன்றியபொழுது வந்தேன்” என்றார்.

சேவையை ஏற்றுக் கொண்டு நாடுவிட்டு நாடு வந்தவருக்கு மஞ்சள் காமாலை வந்த நேரம் இவருடைய ஸ்தாபனம் ஆதரவு தர முன் வரவில்லை. ஆதரவு தேடி வந்த இடத்தில் நண்பர் இவருக்கு மருத்துவம் அளித்து 1 மாதம் வைத்திருந்தார். பிறகு போக இடம் இல்லை. நண்பரும் அவருடன் வேறிருவரும் அவர்கள் தொழில் சம்பந்தமாக ஒரு சர்க்கார் நிறுவனத்தின் தலைவரைச் சந்திக்கப் போனபொழுது “நானும் வரட்டுமா? என இன்ஜீனியர் கேட்டதை எவரும் ஏற்கமாட்டார்கள். கேட்டபின் மறுப்பதெப்படி என அழைத்துப் போனதில், இன்ஜீனியருக்கு நண்பர் கடமைப்பட்டதான நினைவு வந்தது. கடமைப்பட்டவர் நண்பரில்லை, இன்ஜீனியரே. போனவர்கள் சேவை செய்யப்போனார்கள், பீஸ் பெறப் போகவில்லை.

உன்னுடைய பெரிய பலஹீனத்தை உன் வலிமையாக நீ நினைக்கலாம்.

❊ ❊ ❊

பணமுள்ளவர், பணத்தைப் பலம் என நினைப்பார். எழுத்தாளர், எழுத்தைத் தம் சொத்து என்பார். அதுபோல் பல இடங்களில் நாம் பலம் என நினைப்பது நமக்கு வலுவைக் குறைப்பதாக இருக்கும்.

அதை அறியாமல் நம் “பலத்தை” வலியுறுத்தியபடி இருப்போம். காரியம் தொடர்ந்து கெடும். இதை அறிய முடிவதில்லை.

சம்பந்தம் செய்யும்பொழுது செல்வம் பொதுவாகப் பலம். வரும் வரன் நமக்குப் பிடித்திருந்தாலும், அவர்கள் செல்வநிலை தாழ்ந்திருந் தால், செல்வமுள்ள இடத்தில் சம்பந்தம் செய்ய மறுப்பார்கள்.

ஒரு பாங்கில் போய்க் கடன் கேட்டால், என் அண்ணன் MLA என்பது பலம் என நினைக்கலாம். ஏஜண்ட் MLA தம்பிக்குப் பணம் கொடுத்து வம்பில் மாட்டிக் கொள்ளப் பிரியப்படாதவராக இருக்கலாம்.

M.A. I Classஇல் பாஸ் செய்தது குமாஸ்தா வேலைக்கு உறுதுணையாக இருக்கும் என நினைப்பது தவறில்லை. நீ விண்ணப்பிக்கும் ஸ்தாபனத்தலைவருக்குப் படிப்பு குறைவானால் உன் M.A யும், I Class உம் உனக்கு எதிரி.

எந்த இடத்தில் எதற்கு வலுவுண்டு, எந்த அளவுக்குண்டு என்பதை இடம், பொருள் ஏவலைப் பொருத்து நிர்ணயிக்க வேண்டும்.

ஒருவருடைய குறை உன் உணர்ச்சியை கிளறுகிறது எனில் அக்குறை உன்னிடமிருக்கும்.

❊ ❊ ❊

நம் குறையை நாம் காண மறுப்போம். அது நமக்கு உறுத்தலாக இருக்கும். நாம் அதை அறிவதில்லை. பிறரிடம் அதைக் கண்டால், நம் குறை நமக்கு “நினைவு வரும்”. நினைவு வருவதையும் நாம் அறிவதில்லை. அதைக் கண்டாலே பிடிக்காது.

லஞ்சத்தை அளவு கடந்து கண்டிப்பவர்கள் லஞ்சம் வாங்காதவர் கள் என்றாலும், மனத்தால் அதை விரும்பி, சந்தர்ப்பத்தால் அதை நாடாதவர்களாக இருப்பார்கள். குறையில்லாதவர்கள் கண்டிக்க மாட்டார்கள். கண்டித்தால் அதில் தீவிரம் இருக்காது. தீவிரம் இருந்தால் அது “உள்ளே” யிருக்கும்.

மற்றவர் கழுத்தை அறுத்து, தன் சிறு சௌகரியத்தைப் பூர்த்தி செய்யும் மனநிலை உள்ளவர், அதை விட்டுவிட்டால், அளவுகடந்து முன்னேறலாம்.

❊ ❊ ❊

தமக்கு வேண்டியவருக்கு வேலை கொடுக்க வேண்டி 20 வருஷமாக வேலை செய்தவர் 7 பிள்ளையுடையவர் என்பதையும் பொருட்படுத்தாமல், அவரை டிஸ்மிஸ் செய்துவிடக் கூடியவருடைய மனநிலை இது. தான் பெறுவது சிறு சௌகரியம். பிறர் பெறுவது பேரிடி. இம்மனநிலை உள்ளவரால் - **heinous crime** - பஞ்சமா பாதகத்தையும் செய்யமுடியும். இவர் இச் சௌகரியத்தைப் பயன் படுத்தாவிட்டால் மனிதனாவார். அதனால் பெறும் பலன் அதிகம்.

கல்லூரி கட்டப் போகிறேன், பெருமை வேண்டும், என, நிலம் வாங்கப் போனவருக்கு, அங்கு ஏற்கனவே குடியிருந்தவர் தடை. பணம் கொடுக்கிறேன், இடத்தைக் காலி செய் என்கிறார். அவர்களால் காலி செய்ய முடியவில்லை. ஆள் பலம் எல்லா இடத்தையும் காலி செய்தது. கல்லூரி ஏற்பட்டது. பெருமை வந்தது. எதிரி பதவிக்கு வந்தான். கல்லூரியைக் கொடு. பணத்தையும் தர வேண்டாம் என நீயே எழுதிக் கொடு என்றான். குடியிருந்தவருக்கு ஏற்பட்ட நிலை கல்லூரிச் சொந்தக்காரருக்கு ஏற்படும் என அவர் நினைக்கவில்லை. வாழ்க்கை கை மேல் பலன் தரும்.

உனக்கேயுரிய தாழ்ந்த இடத்தைத் தேடி நீ மீண்டும் போனாலும் அங்குப் பிரபலமாக இருக்கலாம் எனில், மீண்டும் உயர்ந்த இடத்திற்கே வந்தால் வானளாவ உயரலாம் என்பதை நீ அறிய வேண்டும்.

❊ ❊ ❊

நல்ல வாய்ப்பு வந்தபின், அதற்குத் தகுந்தாற்போல் உயர்ந்த பழக்க வழக்கங்களை மனிதன் மேற் கொள்கிறான். ஆனால் தன்

தாழ்ந்த சுபாவத்தால் உயர்ந்த பழக்கங்களை வெளிப்படுத்தச் சொல்வது சிரமம். கொஞ்ச நாளைக்கு முயன்று செய்வான். பிறகு பழைய தாழ்ந்த நிலைக்குப் போகப் பிரியப்படுவான். போனால், உயர்ந்த நிலையிலிருந்து கீழே வந்ததால், இங்கு பிரபலமாக இருப்பான். அதுவே அவனுக்குத் திருப்தி தருகிறது.

குப்பை மேட்டில் பட்டினியாக இருந்தவருக்கு ஆபீசர் வருமானமும், அதற்குரிய அந்தஸ்தும் வந்தது. சில ஆண்டு உயர்ந்ததையும், வருமானத்தையும் அனுபவித்தவர் மீண்டும் குப்பை மேட்டை நாடினார். அங்குப் பிரமாதமான வரவேற்பு. வந்த புதிய அந்தஸ்திற்குத் தக்கவாறு தம் மனநிலையையும், பழக்கத்தையும் மாற்றிக் கொண்டால், மேலும் உயர்வு காத்திருப்பதை அவர் அறியார்.

எந்த உயர்வையும் முயன்று பெறுவதைவிட, தாழ்ந்தநிலையில் தன் சுபாவத்திற்கேற்ப, ("சல்லீசாக") "இயற்கை" யாக வாழ மனிதன் பிரியப்படுகிறான்.

உயர்வுக்குரிய முயற்சி மனிதனுக்கு ரஸிப்பதில்லை. தாழ்விலுள்ள சௌகரியம் சுவையாக இருக்கிறது.

எலியைக் குழந்தையாக்கி, தெய்வங்களை மணக்கச் சொன்னால், மீண்டும் எலியாக மாறி எலியை மணப்பதையே விரும்புவதை ரிஷிக்கு உணர்த்திய கதை மனித சுபாவத்தின் ''சுவை''யை உறுதிப் படுத்துகிறது.

ஆதரவு அளித்தவருக்கு நன்றியும் சொல்ல முடியாதவர், மீண்டும் ஆதரவு கேட்பவராக இருந்தால், அவர் தம் போக்கை முறையாக மாற்றினால், பெரிய உயர்வுண்டு.

❊ ❊ ❊

தொழில் ஆரம்பித்தார். சிறு தொழில் என ஆரம்பித்தது மேலும் மேலும் சிறிய தொழிலாயிற்று. தொட்டனவெல்லாம் கரியாயின. 5 வருஷம் ஓடியது. தொழிலை மூடுவதா, ஓடுவதா? நடத்துவதா?

நடத்துவதென்றால் எப்படி என்ற நிலையில் ஒருவர் வந்தார். நிலையை மாற்ற எளிய முறையைச் சொன்னார். நிலைமை இரண்டு நாளில் மாறியது. எதுவும் கூடி வந்தது. இதுவரை இருந்த மாதிரியில்லை. ஒரு நாள் திடீரென பாக்டரி முன் ஒரு கார் வந்து நின்றது. கார்கள் இந்த பாக்டரிக்கு வருவதில்லை. அதிலிருந்து ஒருவன் வந்து முதலாளியைக் கூப்பிட்டான். காரில் ஒரு சாமியார் இருந்தார். சாமியார் முதலாளியைப் பார்த்து, "ஐந்து வருஷமாக எல்லாம் அழிந்தது. இனி பொற்காலம் நூறுமடங்கு உயரலாம்" என்றார்.

மாறிய நிலைக்குரிய பேச்சும், செயலும் எழுந்தன, மாற வழி சொன்னவர் உடனிருக்கிறார். அவருக்கு "நன்றி" என ஒரு வார்த்தை சொல்ல முதலாளிக்கோ, அவர் தம்பிக்கோ தோன்றவில்லை. ஒரு வேளை மீண்டும் தொந்தரவு வந்தால் கேட்பார்கள் போலிருக்கிறது!

இந்த முதலாளி "நன்றி" சொல்ல கற்றுக் கொள்ள வேண்டும். நன்றியை உணர வேண்டும். நன்றியை உணராதது விலங்கு வகையைச் சேர்ந்தது என அறிய வேண்டும். மனிதனாக மாற ஆசைப்பட வேண்டும். இனி மறக்காமல் நேரம் வந்தால் நன்றியுணர்வு வெளிப்பட வேண்டும். அப்படி மாறினால் **sky is the limit** வானளாவ உயரலாம்.

அன்பு, ஆதரவு, ஆசி, பலன் ஓரிடத்திலிருந்து வந்தால், பயன்பெற்றவர் அதற்குரிய நன்றியை வேறொருவர்க்குச் செலுத்துவதுண்டு. வந்ததை இழக்கும் முறை இது. உரியவர்க்கு, உடையதை அளித்தல் அவசியம்.

❊ ❊ ❊

ஏழை அரசியல்வாதியின் மீது பாசமுள்ள வசதியற்ற நண்பர் ஒருவர். நண்பருக்கு வேண்டிய செல்வர் ஒருவர். அரசியல்வாதி பட்டினி கிடப்பதைக் கண்டு எந்த நண்பரும் உதவ முன்வரவில்லை. இந்தச் செல்வரையும் அரசியல்வாதி அறிவார். அவர் எப்பொழுதுமே உதவியதில்லை. வசதியற்ற நண்பர் மாதம் ரூ. 180/- சம்பளம்

பெறுபவர். ரூ.500/- ஐத் தேடிப்பிடித்து அரசியல்வாதிக்கு நன்றிப் பெருக்குடன் அளித்தார். அரசியல்வாதி பணத்தைப் பெற்றுக் கொண்டு பணம் செல்வரிடமிருந்து வந்தது எனத் தவறாகப் புரிந்துகொண்டு "உங்கள் செல்வ நண்பருக்கு என் நன்றியைத் தெரிவியுங்கள்" என்றார். கொடுத்தவர் திடுக்கிட்டார். கொஞ்சநஞ்சம் உதவியும் அரசியல்வாதி வாழ்வில் அன்றே அஸ்தமித்து விட்டது. நன்றியில்லாதது குறை. நன்றியைச் சம்பந்தமில்லாதவருக்குச் செலுத்த நினைப்பது குற்றம்.

எரிச்சல் வந்தால், அதை இழந்து முன்னேற வாய்ப்புண்டு என்று அறிய வேண்டும்.

அதேபோல் முன்னேற உள்ள வாய்ப்பை அறிந்து முழுவதும் பயன்படுத்த வேண்டும்.

❊ ❊ ❊

வலிமை குன்றியவன் ஒரு காரியத்தில் ஈடுபட்டுத் தோல்வி யுற்றால் மனமுடைந்து மூலையில் உட்கார்ந்துவிடுவான். அல்லது அழுவான். மேற்கொண்டு செய்வதை அவனால் அறிய முடியாது. அதற்கடுத்த உயர்ந்த நிலையிலுள்ளவனுக்கு எரிச்சல் வரும். எரிச்சல் வந்தால், இயலாமை எனப் பொருள். வந்த தோல்வியை ஏற்க முடியவில்லை. வெற்றியைப் பெற முடியவில்லை என்ற நிலையிலுள்ள வனுக்கு எரிச்சல் வரும். இதற்கடுத்த நிலையிலுள்ளவன் தோல்வி ஏற்பட்டவுடன் நிதானமாகத் தோல்விக்குரிய காரணத்தை ஆய்ந்து, களைய முற்படுவான். எரிச்சல் வந்தால், இவனால் அடுத்த கட்டத்திற்குப் போகமுடியும் எனப் பொருள். நிதானமாக எரிச்சலை அடக்கி, சிந்தனை செய்தால் பலன் உண்டு.

தோல்வியில் முன்னேறும் வாய்ப்பிது. தோல்வியற்ற நிலையிலும், வெற்றியிலும் முன்னேறும் வாய்ப்புகள் ஏராளம். அவற்றை அறிந்து பயன்படுத்த வேண்டும். சில உதாரணங்கள்.

* தோல்வியை எதிர்பார்த்தபோது, தோல்வி வரவில்லை எனில்,

முயன்றால் பெருவெற்றியுண்டு எனப் பொருள்.

* தோற்ற பின்னும் மரியாதை குறையவில்லை எனில், நமக்குக் கண்ணுக்குத் தெரியாத பலம் இருக்கிறது, நாம் அதைப் பயன்படுத்த வேண்டும் எனப் பொருள்.

* திவாலானவர்க்கு வலிய கடன் கொடுக்க முன் வந்தால், நாணயமும் திறமையும் அபரிமிதமாக இருக்கின்றன, அவற்றை முன்னுக்கு வைத்தால் பெரும் பலனுண்டு என்று புரிந்து கொள்ள வேண்டும்.

* எதிரி திறமையை மெச்சினான் எனில், திறமை அதிகம், நாம் வாழுமிடம் பணிவான இடம் என அறிய வேண்டும். பணிவான இடத்தில் அபரிமிதமான திறமை அளவு கடந்த பலனைத் தரும்.

பொதுவாக அனைவரும் பாராட்டுவது உனக்குக் கசப்பாக இருந்தால், அது வாழ்க்கை வளம் பெறும் வாயிலாகும்.

❊ ❊ ❊

எல்லோரும் ஆர்வமாக வீடு கட்டுகிறார்கள். நல்ல வருமானமிருந்தும் வீடு கட்ட நினைத்தால் ஊதாரிக்குக் கசப்பாக இருக்கும். கசப்பாக இருப்பது தன் ஊதாரித்தனத்தால். வீண் செலவு செய்பவனுக்குக் கடமைகளைச் செய்ய முடியாது. இப்படிப்பட்டவர்கள், தம்மை மாற்ற விரும்பினால், சாதாரண மனிதரை விட அதிக முன்னேற்றம் பெறுவர். (Tour) பிரயாணம் செய்ய அனைவரும் பிரியப்படுவார்கள். ஒருவருக்குப் பிரயாணம் என்றாலே கசப்பு எனில் சிறு வயதில் பிரயாணச் சம்பந்தமான (complex) விஷயத்தில் மனம் நொந்து போயிருக்கும். அதனால் இன்று அது பிடிக்கவில்லை. தம் மனத்தைச் சோதனை செய்தால், கசப்பு நீங்கும். அத்துடன் தடை விலகும். அளவு கடந்த தெம்பு உற்பத்தியாகும். இதுவே பொது விதி, விலக்கான உயர்வும் உண்டு. தாழ்வும் உண்டு. அனைவரும்

விரும்புவதை ஒருவர் வெறுத்தால், அந்த இடத்தில் அவர் மனத்தில் தடையிருக்கும். அதை விலக்கினால் வாழ்வு மலரும்.

அன்றாட வாழ்வில் அவசியமானது உனக்கு வெறுப்பாகவும், கசப்பாகவுமிருந்தால், அங்கு உன் வாழ்வின் இரகஸ்யமிருக்கும். அதனுள் ஒரு சிக்கலிருக்கும் (complex). அதை ஆராய்வது நல்லது.

❊ ❊ ❊

உலகம் போற்றுபவரை நீ வெறுத்தால், உலகம் போற்றும் பண்பு உனக்குக் கசந்தால், அவற்றையும் பரிசோதனை செய்வது நல்லது.

❊ ❊ ❊

மேற்சொன்ன கூற்றுகளுக்கு எடுத்துக்காட்டாக இலட்சியப் புருஷர்களிருந்திருக்கிறார்கள். அவர்கள் நிலையை விதிவிலக்காகக் கொண்டு, இங்குக் கருத வேண்டியதில்லை. பரமஹம்ஸருக்குத் தங்கம் உடலைக் கூசும்படிச் செய்தது. புத்தர் மனைவியை விட்டகன்றார். அசோகர் வெற்றியை உதறித் தள்ளினார். மகாத்மா பதவியை வெறுத்தார். நாம் அன்றாட வாழ்வைக் கருதுவதால் விலக்கானவற்றை இங்குச் சேர்த்து குழப்பத்தை உற்பத்தி செய்ய வேண்டாம்.

வெற்றி, பணம், காதல், பிரியம், அழகு, உடை, பிரயாணம், நல்ல உணவு, வசதி, புகழ் அனைவரையும் கவருவன. மகாத்மாவை அனைவரும் போற்றுவர். இனிமையான பழக்கம் எவரையும் கவரும். இவற்றை வெறுப்பவருண்டு. உத்தமரையும், உத்தமகுணங்களையும் ஒதுக்குபவருண்டு. வாழ்வில் நடந்த நிகழ்ச்சியால் அனைவருக்கும் பிரியமானது ஒருவருக்கு கசந்து போயிருக்கும். ராஜாஜிக்கு எலக்ஷன் என்றால் அலர்ஜி. அவர் ஆரம்ப நாட்களில் தேர்தலில் நின்று தோற்றுப் போயிருக்கிறார். அதனால் 70ஆம் ஆண்டிலும் எலக்ஷனை ஒதுக்கினார். பேச்சுத் திறமையுள்ளவருக்கு ஒரு பேச்சுப்

போட்டியில் நன்றாகப் பேசியும் பரிசு தவறியிருக்கும். அதிலிருந்து பேசுவதே கசப்பாகியிருக்கும். தாயாரை விரும்பாத குழந்தையில்லை. சிறுவயதில் தாயார், சூடு போட்ட குழந்தைக்குத் தாய் என்ற சொல்லே விஷமாக இருக்கும். சிறந்த பாடகியை, உயர்ந்த நடிகனை, உத்தமமான தலைவரை, அற்புதமான பழக்கத்தை இதுபோன்ற நிகழ்ச்சியால் ஒருவர் வெறுக்க நேரிட்டிருக்கும்.

இன்று அந்த வெறுப்பைச் சோதனை செய்தால் உண்மை விளங்கும். உணர்ச்சியும், எண்ணமும் அதன் பின் உருண்டு திரண்டு ஒளிந்திருக்கும். காரணம் விளங்கினால், ஒளிந்துள்ள சக்தி வெளி வரும். புனர் ஜன்மம் வரும்.

I.C.S.இல் 8வது (**rank**) வந்த தம் தகப்பனாரை, விலக்கி 9வது வந்தவருக்கு உத்தியோகம் கொடுத்து, தகப்பனாரை விட்டுவிட்டிருந்தால், அத்துடன் தகப்பனாருக்கு **ICS** என்றால் கசப்பாகி விட்டிருக்கும். நாட்டில் 8 பேருக்கு அந்த நாளில் கிடைக்கும் பாக்கியம் தமக்குக் கிடைத்து பிறகு ஏமாற்றப்பட்டால் அது விரக்தியளிக்கும். அடுத்த தலைமுறையின் உணர்வையும் அது பாதிக்கும். இது ஒரு சிக்கல் மனப்பான்மை (**complex**) ஆகி நம் சக்தி முழுவதையும் ஆட்கொள்ளும். காரணம் புரிந்தால் பெருவெள்ளம் போல் புத்துயிர் எழும்.

தொடரும்.

❈ ❈ ❈

ஜீவிய மணி

தீமை என்பது ஆனந்தத்தை உற்பத்தி செய்யும் ஆரம்ப நிலை.

இம்மாதச் செய்தி

இறைவா, சாஸ்திரமும் நீயே, உத்சாகமும் நீயே, குருவும் நீயே, காலமும் நீயே என்றுணர்த்திய பொழுது நான் வியந்தேன். என் வியப்பு அடங்குவதற்குள் நீயே நான் என்றருளிய உன்னை எவ்வாறு வர்ணிப்பேன்.

“அம்மா என்னை நீ தேடி வந்தபொழுது நான் கண்டுகொள்ளவில்லை. மீண்டும் வந்து உன்னைக் கண்டுகொள்ளும் ஞானத்தையும் கொடுத்து, என்னை ஏற்றுக்கொள் என்றும் சொல்லி, என்னை அருளால் ஆட்கொண்ட அற்புதத்தை நான் உன்னில் கண்டேன்.

❈ ❈ ❈

லைப் டிவைன்

கர்மயோகி

VIII. The Methods of Vedantic Knowledge

Para No: 3

Human reason has a double action.
It can be mixed or dependent.
It can also be pure and sovereign.
Reason sometimes confines itself.
It limits itself to sensible experience.
Then, it admits law as final.
Law studies only phenomenon.
Phenomenon is the appearance of things.
Appearance is in relations.
Processes and utilities also give appearances.
This is rational action.
It is incapable of knowing anything.
It knows the appearances.
The truth is in the depths of being.
Reason cannot fathom it.
Reason surveys becoming.
Reason can also assert.
Its pure action does so.
It accepts our sensible experience.

8. வேதாந்த ஞானம்

பகுத்தறிவு இருவகைகளில் செயல்படும்.
தனித்தும், கலந்தும் செயல்பட வல்லது அறிவு.
தூய்மையாகவும், பவித்திரமாகவும் அதனால் செயல்படமுடியும்.
அறிவு தன்னைக் கட்டுப்படுத்துவதுண்டு.
புலனுக்கு அதுபோல் கட்டுப்படும்.
அப்படிக் கட்டுப்பட்டால், அறிவைச் சட்டம் கட்டுப்படுத்தும்.
சட்டம் தோற்றத்திற்குரியது.
தோற்றம் என்பது புறத்தோற்றம்.
தோற்றம் தொடர்பாலானது.
பலனும், வழியும் தோற்றத்திற்குரியவை.
இதுவே பகுத்தறிவின் செயல்.
அதற்கு வேறெதுவும் தெரியாது.
தோற்றம் மட்டும் தெரியும்.
சத்தியம் ஜீவனின் ஆழத்திலுள்ளது.
அறிவால் ஜீவனை ஆழங்காண முடியாது.
அறிவு வாழ்வை ஆராய்ச்சி செய்கிறது.
அறிவுக்கு வலிமையுண்டு.
அதன் தெளிவான செயல் தன்னை வலியுறுத்தவல்லது.
புலனனுபவத்தை அறிவு ஏற்கும்.

But it is not final for the reason.
It is only a starting point.
Reason goes behind the experiences.
It refuses to limit itself by it.
It works in its own right.
Behind the appearances are concepts.
They are unalterable.
They do not attach to the appearances.
These concepts are general.
Reason strives to reach them.
It judges by them.
Reason passes from the appearance behind.
Thus it may arrive at its result.
It will be a direct judgement.
This may appear to be the result of sense experience.
It may also appear to depend on it.
But it is really a perception of reason.
Here it works on its own right.
There is another more characteristic action of reason.
Its perception starts from an experience.
It is a mere excuse.
Reason may leave it behind.
Maybe far behind.
And proceed to the result.
Our senses give us an experience.
They wish to dictate a result.

அறிவுக்கு அதுவே முடிவானதன்று.
அது ஆரம்பமே.
அறிவு அனுபவத்தைக் கடந்து செல்லும்.
அனுபவத்திற்கு அறிவு கட்டுப்படாது.
தன் சுய உரிமையுடன் செயல்படக்கூடியது அறிவு.
தோற்றத்தின் பின் தத்துவம் மறைந்துள்ளது.
அவை மாற்றமில்லாதவை.
தத்துவம் தோற்றத்தால் பாதிக்கப்படாது.
இந்தத் தத்துவங்கள் பொதுவானவை.
அவற்றைக் காண அறிவு முயல்கிறது.
தத்துவத்தைக் கொண்டு அறிவு முடிவு செய்கிறது.
தோற்றத்தைக் கடந்து அறிவு அதன்பின் செல்கிறது.
தன் முடிவை அறிவு அங்கு நாடுகிறது.
அதுவே தீர்க்கமான முடிவாகும்.
இது புலனறிவின் பலனாகத் தோன்றும்.
புலனை நம்பியிருப்பதாகவும் தோன்றும்.
இருப்பினும் இது பகுத்தறிவின் பார்வை.
அதுவே அதன் தனி உரிமை.
அறிவுக்கேயுரிய அடுத்த அம்சமும் உண்டு.
அப்பார்வை அனுபவத்திலாரம்பிக்கிறது.
அது வெறும் சாக்கு.
அறிவு அதைக் கடக்கும்.
கடந்து காததூரம் செல்லும்.
நேராகப் பலனை நோக்கிப் போகும்.
புலன்கள் அவ்வனுபவத்தைத் தரும்.
அவை ஓர் முடிவை வலியுறுத்தும்.

Reason may arrive at an opposite result.
This movement is legitimate.
It is indispensable.
Our normal experience is small.
It covers a small part of the universal fact.
This is a limited field.
Our instruments are defective.
They give us false weights and measures.
It must be exceeded.
We must put it away to a distance.
Their insistence must be denied.
Our conceptions are inadequate.
There are more adequate conceptions.
They give us the truth of things.
We must arrive at it.
Sense-mind commits errors.
Reason must correct them.
It is a valuable power.
Man has developed it.
He is a superior terrestrial being.
Reason makes him so.

Page : 61
Para : 4

Senses belong to physical knowledge.
Reason is of the metaphysical.

அறிவு எதிரான முடிவுக்கும் வரும்.
இது சரி.
இது தவிர்க்க முடியாதது.
நமது அனுபவம் சிறியது.
பிரபஞ்சத்தின் மிகச் சிறிய பகுதி அது.
இது அளவுக்குட்பட்டது.
நம் கருவிகள் குறையுடையவை.
அவை தவறாக எடை போடவல்லவை.
நாம் அவற்றைக் கடக்க வேண்டும்.
நாம் அவற்றிலிருந்து தூர விலக வேண்டும்.
அவற்றை மறுக்க வேண்டும்.
நமது தத்துவம் சிறியது.
பெரிய தத்துவங்களுண்டு.
அவை உண்மை.
அவற்றைக் காண வேண்டும்.
புலன் தவறு செய்யும்.
அறிவு அதைத் திருத்த வேண்டும்.
அறிவு உயர்ந்தது.
அது மனிதனுக்குரியது.
மனிதன் பூமியில் உயர்ந்த பிறவி.
அறிவால் மனிதன் உயர்வடைகிறான்.

புலன்கள் ஜடத்தை அறியும்.
அறிவு தத்துவமானது.

Our being is integral.
Metaphysics gives us concepts.
It does not fully satisfy us.
Pure reason accepts concepts entirely.
It is satisfactory to it.
Concepts are the stuff of reason.
Our nature has two eyes.
Things appear as an idea.
They also appear as facts.
Therefore concepts are incomplete for us.
They are unreal to a part of us.
Only experience is complete there.
Now we have different truths.
They are of a different order.
They are outside our experience.
They cannot be seen by the senses.
They can be seen only by the reason.
It needs another faculty in us.
We are dealing with the supraphysical.
So, we must extend our psychological experience.

contd...

நம் ஜீவன் முழுமையுடையது.
தத்துவம் விளக்கம் தரும்.
அது திருப்தி தராது.
அறிவு தத்துவத்தை பூரணமாக ஏற்கும்.
அறிவுக்குத் தத்துவம் திருப்தி தரும்.
தத்துவம் அறிவுக்கேயுரியது.
நமக்கு இரு பார்வைகளுண்டு.
பொருள்கள் எண்ணமாகத் தோன்றும்.
அவை பொருள்களாகவும் தோன்றும்.
அதனால் தத்துவம் நமக்குப் போதாது.
நம்முள் ஒன்று தத்துவத்தை மாயை என்று கூறும்.
அனுபவமே முழுமை தரும்.
பலவகையான உண்மைகள் உள.
அவை வேறு வகையானவை.
அவை நமக்கு அனுபவமில்லை.
அவற்றைப் புலன்களால் அறியமுடியாது.
அறிவால் அறியலாம்.
அதற்குப் புதிய திறமை தேவை.
நாம் சூட்சுமத்தில் இங்குச் செயல்படுகிறோம்.
எனவே, நம் ஆத்மானுபவத்தை வளர்க்க வேண்டும்.

தொடரும்...

P. 13. The world unknowing, for the world she stood

தன்னையறியாத உலகத்தின் சார்பாக அவள் வாழ்ந்தாள்

இப்பக்கத்திலுள்ள சில கருத்துகள்:

- கடந்தவற்றை அறிதல் அவசியம்.
- பழைய பாக்கி தீருதல் தேவை.
- ஆன்மாவின் கடனைக் காலத்தில் செலுத்த வேண்டும்.
- ஆன்மபலம் தவிர மற்றதை அறியாதவள்.
- தனிமையில் ஆன்மா தவம் செய்கிறது.

பிரம்மாண்டமான வெற்றிகள் தங்கள் வருகையைப் பறை அறைவிப்பதில்லை என அன்னை கூறியுள்ளார்.

தியாகம் உண்மையும், பெருமையும் உடையதானால் உலகம் ஏற்றுப் போற்றும். அந்நிலையையும் தியாகம் கடக்குமானால், மனிதன் உயர்ந்து தெய்வமாகிறான். தெய்வ நிலையில் தியாகம் எவர் கண்ணிலும் படாது. படக்கூடாது.

* ரோடு போட்டால் அதை உலகம் அறியும். ரோட்டைத் தாங்கும் பூமியை நாமறிவதில்லை.
* தலைவனை உலகம் ஏற்கும். போற்றும், மகுடம் வைக்கும். அவனைப் பெற்றெடுத்த தாயை அறிய முயலாது. அவன் உலகுக்குச் சேவை செய்ய தங்களைத் தியாகம் செய்த குடும்பத்தை அறியாது.
* பேர் உத்சவங்களில் உலகமே கலந்துகொள்ளும். அவற்றை நடத்திய ஆயிரம் சிப்பந்திகள் இருப்பதையே எவருமறியார்.
* புத்தகம் பிரபலமானால் ஆசிரியர் விருது பெறுகிறார். புத்தகத்தை அச்சிட்டு வழங்கியவரும், உலகெங்கும் எடுத்துச் சென்று விற்பவருமான வியாபாரியையும் நாமறிவதில்லை.

எண் சாண் உடம்பிற்குச் சிரசே பிரதானம். நாம் காண்பது அவர் முகம். முகமே மனிதன் எனக்கொள்கிறோம். ஆயிரம் உறுப்புகள் அரை வினாடி தவறாமல் செயல்பட்டு மனிதனாக இயங்கவைப்பதை அறியவோ, நினைக்கவோ, நம்மால் முடிவதில்லை.

ஆற்றில் 10 அடி தண்ணீர் ஓட பூமிக்கடியில் 100 அடி நீர் ஊற வேண்டும். கரையின் இருபுறமுள்ள ஆயிரம் ஏரி, குளம், கிணறுகள் நிரம்ப வேண்டும். ஒரு துளி வெள்ளம் பெருக ஓராயிரம் துளிகள் தங்களை மறைத்துச் சேவை செய்ய வேண்டும்.

இன்று மனிதன் ஒரு நாள் தன் கடமையைச் செய்ய, கடந்த அவன் வாழ்வு அடிப்படையாக அமைகிறது. எதிர்கால வாழ்வுக்கு அடிப்படையை இன்று அமைக்கிறது. சூழலில் நடப்பவை அனைத்தும் உறுதுணையாக நிற்கின்றன. ஒருவன் வாய்திறந்து பேச ஓராயிரம் ஆத்மாக்கள் மௌனமான இசைவு தரவேண்டும். பழைய பாக்கி தீர வேண்டும். காலம் தன் கடமையைச் செய்ய மனிதனை மௌனமாக வற்புறுத்தும். காலத்தைக் கடக்க மனிதனால் நினைக்க முடியாது.

பெற்றோர் பையனைப் பள்ளியில் சேர்க்கலாம். ஆசிரியர் பாடம் சொல்லித் தரலாம். அச்சகம் புத்தகத்தை அச்சிட்டுத் தரலாம். ஆனால் பரீட்சையில் பையன் தானே எழுத வேண்டும் என்பதுபோல உடலோடு உடலாக ஊர் வாழும், உணர்வோடு உணர்வாக உற்றார் உறையலாம். அறிவை அநேகம் பேர் ஏற்கலாம், ஆதரிக்கலாம். ஆனால்,

ஆன்மா அதன் கடமையைத் தனித்தே ஆற்ற வேண்டும்.

உலகத்திற்காகப் பிறந்த சாவித்திரியை உலகம் அறியவில்லை. உலகத்திற்காக வாழ்ந்தபொழுதும் உலகம் அறியவில்லை. உலக இருளை அழித்து ஒளியாக்கியபொழுதும் உலகம் சாவித்திரியை அறியவில்லை. இது அன்னையின் பூவுலக வாழ்வு.

அன்னை நம்மிடம் வாழ்ந்தார். உலகப் போர்களை வென்றார். அடுத்துவரும் உலகப் போரைத் தடுத்தார். மனிதனின் சிறுமையை ஏற்றுப் பெருமையாக மாற்றினார் என உலகம் அறியவில்லை. இனியும் அறியுமா எனத் தெரியவில்லை.

❋ ❋ ❋

ஸ்ரீ அரவிந்த சுடர்

நியாயமாகவும், நேர்மையாகவுமிருக்கும்பொழுது நமக்குத் தீங்கிழைத்தால், கோபம் பீறிட்டெழுகிறது. நேர்மையின் தோற்றமிருந்து, உண்மையில் நேர்மையில்லா விட்டால் அடுத்தவர் தீங்கிழைக்க முடிகிறது. அதனால் உணர்வு புரட்சி செய்கிறது.

விமானப் பயணம்

புதுவை வந்து சமாதி தரிசனம் செய்த அன்பர் மாத்ரு மந்திர் போனார். சமாதி அற்புதமாக இருக்கிறது. மாத்ரு மந்திரில் மௌனம் வெள்ளமாக நிறைந்திருந்தது. தண்ணீரை விலக்கிக் கொண்டு போவதுபோல் உள்ளே நடந்து செல்ல வேண்டியிருந்தது. மனம் தன் நிலையை இழந்தது. உணர்வு விழிப்புற்று மௌனம் உள்ளே பாய்ந்தது. மனம் இருந்த இடம் தெரியவில்லை. இது புதுப் பிறவி, புனர்ஜென்மம். அன்னை தம்முள்ளே ஆழத்தில் பிறந்துள்ளார் என்ற ஆத்மத் தெளிவு ஏற்பட்டது. சுமார் 6 வருஷம் கழித்து, புதுவை வந்ததும், சமாதியில் அனுபவம் பெற்றதும், மாத்ரு மந்திரில் ஆத்மா விழிப்புற்றதும் அன்பருக்குப் பெரிய பேறு.

சென்னையில் விமானம் ஏறும்பொழுது ஜன்னல் பக்கத்து சீட் வேண்டும் எனக் கேட்டிருந்தார். அது கிடைக்கவில்லை. வேறு இடம் கொடுத்தார்கள். அது சௌகரியமாக இல்லை. தாம் கேட்ட இடம் தாராததால் ஏன் தமக்கு **business class** இல் இடம் தரக் கூடாது என நினைத்தார். இவர் டிக்கெட்டைப் போல் **business class** டிக்கட் 3 மடங்கு அதிக விலை. விமானம் நிறைய பிரயாணிகள்.

தம் எண்ணம் சரியில்லை என அறிந்து மனத்தை மாற்றிக் கொள்ள வேண்டும் என்று நினைத்தவர் தம் எண்ணம் நியாயமற்றது எனவும், சொல்லப்போனால் சுயநலமானது எனவும் உணர்ந்து, அன்னை வழிபடி செயல்பட வேண்டுமானால் தாம் என்ன செய்ய வேண்டும் என சிந்தித்தார். அவருடைய சிந்தனைகளை அவர் சொற்களால் எழுதுகிறேன்.

“என்னை என் சீட்டிலிருந்து மாற்றினார்கள். சமாதி, மாத்ரு மந்திர் சூழல்களை பயனுள்ளவகையில் பெறும்படி நடப்பதென நான் சிந்தித்துக் கொண்டிருந்தேன். மனம் உயர வேண்டிய இடங்கள் பல இருப்பதால், எண்ணம் பல இடங்களுக்கும் ஓடுகிறது. ஆனால்

முன்னேற்றமில்லை என நான் அறிகிறேன். எனவே என்னை மட்டுமே நினைத்துக்கொண்டிருக்கும் பழக்கத்தை – self centred ego – மாற்ற நினைத்தேன். என்னைப்பற்றிக் குறைவாகவும், பிறரைப்பற்றி அதிக மாகவும் நினைப்பது சரி என்ற எண்ணம் அதிகமாகப் பலிக்க அன்னையை அழைத்தேன். இதுபோன்ற எண்ணம் எனக்கு இயல்பாக எழுவதில்லை. சமாதியருகிலும், மாத்ரு மந்திரிலும் இந்த நல்ல எண்ணத்தையே முன்வைத்து வணங்கினேன். நான் சென்னையிலி ருந்து திரும்பி வரும்பொழுது நான் கேட்டபடி எனது சீட் ஜன்னலரு கிலில்லை. மனம் இரகஸ்யமாக business classக்குப் போக ஆசைப் பட்டது. விமானம் பயணிகளால் நிறைந்திருந்ததால் சிரமம் அதிகமா கத் தெரிந்தது. இது நடக்காத எண்ணம் என ஆசையை மனதிலி ருந்து விலக்க முயன்றேன். (Business class டிக்கெட் இப்பயணத்தில் 4 மடங்கு விலை அதிகம்). நானுள்ள இடம் அசௌகரியமாயிருந்தது. இதைவிடச் சற்று சௌகர்யமான இடம் கொடுக்க மாட்டார்களா என நினைத்துக்கொண்டிருக்கும்பொழுது, மனம் விமானக் கம்பெனியை நாடியது. விமானம் நிறைந்திருப்பதால் கம்பெனிக்கு அதிக வருமானம் என்று நினைத்து மனம் உள்ளபடியே சந்தோஷப்பட்டது. என் சொந்த ஆசைகளை மறந்தேன். இந்தியாவுக்கு வருமுன் இதுபோன்ற எண்ணம் எனக்குத் தோன்றவில்லை. சில வினாடிகளுக்குள் purser வந்து என்னை business classக்கு மாறும்படிக் கேட்டுக் கொண்டார்! என் சுயநலமற்ற எண்ணத்திற்கும், செலவில்லாமல் உயர்ந்த இடம் என்னைத் தேடி வந்ததிற்கும் உள்ள தொடர்பு தெளிவாகத் தெரிந்தது. ஒரு வகையில் சிறு சிறு விஷயங்களானாலும், மனமாற்றம் எதிரொலியை எழுப்புகிறது என்ற அளவில் இது பெரிய விஷயம் என்பதால் உங்களுக்குச் சொல்லப் பிரியப்பட்டேன்".

மனமாற்றம் பெரியது. அன்னைக்கு முக்கியமானது. எதிரொலியை எழுப்பவல்லது. இதையே பிரச்சினை தீர்க்கும் மார்க்கமாகப் பயன்படுத்துவதும் உண்டு. அதே க்ஷணம் அன்னை செயல்பட அன்பர் பயன்படுத்தக் கூடிய முறை மனமாற்றம்.

❊ ❊ ❊

"பகவானுடைய இதர நூல்கள்''

வாழ்வுக்குரிய சட்டம்போல் மனத்திற்குரிய சட்டங்களும் உண்டு. ஆன்மாவுக்குரிய சட்டங்களும் உள்ளன. சிலவற்றை மட்டும் உதாரணமாக எழுதுகிறேன். நீண்ட விளக்கமின்றிச் சுருக்கமாக எழுதுகிறேன்.

1) நமக்கு வரும் அத்தனைத் தொந்தரவுகளும், நம்மால் பயனடைந்தவர்களால் மட்டுமே வரும்.
2) ஒரு நல்ல காரியம் செய்தால், பெற்றவர் அதை மறந்துவிட்டாலும், அந்தக் காரியம் நம்மை மறக்காது. அதே குணமுள்ள மற்றொருவர் மூலம் நமக்குரிய பலன் வரும்.
3) பலனை எதிர்பார்த்தால், எதிர்பார்த்த அளவு பலன் வரும்.
4) பலனை எதிர்பார்க்காவிட்டால், அதிகப் பலன் வரும்.
5) நாய் விற்ற காசு குலைக்குமா என்பது பழமொழி – நிச்சயமாகக் குலைக்கும்.

   பணம் எந்த வழியாக வருகிறதோ, அதேபோல் செலவாகும்.
6) நல்ல முறையில் சம்பாதித்த பணம் கடனாகக் கொடுக்கப்பட்டால் தவறாது வரும். கேட்காமலும் வருவதுண்டு.

மேற்சொன்னவை வாழ்வுக்குரியவை. மனத்திற்குரியவை சில.

1) கேட்டால் கிடைக்காது, எதிர்பார்த்தால் கிடைக்காது. கேட்காவிட்டால் கிடைக்கும்.
2) வாய் விட்டுப் படித்தால் கொஞ்சம் புரியும். மௌனமாகப் படித்தால் அதிகம் புரியும்.
3) சிந்தனை பலன் தரும். சிந்திக்காவிட்டால் அதிகமாகப் புரியும், அதிகமாகப் பலன் எழும்.

ஆன்மாவுக்குரிய சில சட்டங்களும் உண்டு.

1) பிரியம் எவர் மீதுண்டோ அவர் வியாதி, கர்மம், அதிர்ஷ்டம், குணம், நம்மை நாடி வரும்.
2) பரோபகாரம் செய்தால் பெற்றவர் துரோகம் செய்வார்.

3) ஆண்டவனுக்குச் சேவை செய்ய விரும்பினால், அதை யாருக்குச் செய்தாலும் சேவையை அவர் மூலம் ஆண்டவன் பெற்றுக் கொள்வார்.

அன்னைக்குரிய சட்டங்களில் சில.

1) பணம் செலவு செய்தால் பெருகும்.
2) நமக்கு எப்பொருள் அபரிமிதமாகத் தேவைப்படுகிறதோ, அதை நல்ல மனதுடைய அன்னை அன்பருக்குக் கொடுத்தால், அப்பொருள் நம்மை நாடி அபரிமிதமாக வரும்.
3) சேவை என்பதை ஆண்டவனுக்கு மட்டும்தான் செய்யமுடியும்.
4) நாம் மனத்தால் அன்னைக்குரியவராக மாறுவதுதான் அச்சேவை.
5) பொருள்களுக்கு ஜீவன் உண்டு.
6) ஜீவனோடு பொருள்களைக் கவனித்தால் அவை நம்மிடம் பேசும், உறவாடும், ஒட்டிக் கொள்ளும்.
7) உடலுக்கு உயிரிருப்பதைப்போல், மனம் உண்டு, ஆத்மாவுண்டு, சைத்தியபுருஷனுண்டு.
8) மானுடர் அனைவருக்கும் ஒரே மனம், ஒரே உயிர், ஒரே ஆன்மா, ஒரே உடலாகும்.
9) காலம் உடலுக்கும், உணர்வுக்கும் வேறுபட்டது.
10) உடலுக்குரிய காலம் 1 நிமிஷம் 1 மணியாக நகரும்.
11) உணர்வுக்குரிய காலம் 1 மணி 1 நிமிஷமாக ஓடும்.
12) அன்னை சக்தி செயல்படும்பொழுது ஜடத்திற்குள்ள சட்டங்களை மீறும். (தண்ணீர் பள்ளத்திலிருந்து மேட்டுக்குப் போகும்)
13) ஒருவர் நம்மை நாடி வரவேண்டுமானால், அவர் உணர்வுடன் தொடர்பு கொண்டால் அது முழுமை பெறும் நேரம் அவர் நம்மை நாடி வருவார்.
14) ஒரு பொருள் அபரிமிதமாகப் பெருகவேண்டுமானால் அதன் ஆத்மீகம் நமக்குத் தெரிய வேண்டும் (1 லிட்டர் அரிசியில் 5 பேர் பசியாறுவது வழக்கமானால் அதன் ஆத்மீகம் தெரிந்தால் 8 பேருடைய பசியை அது ஆற்றும்).

Agenda Vol 4, P.26

This way it is the Lord, that way it is the doctor

மனம் சிறிது மாறினால் இறைவன் மனிதனாக மாறுகிறான்

நாம் எங்கிருக்கிறோம் என்பதைவிட என்ன மனநிலையிலி ருக்கிறோம் என்பதே நாம் அருளைப் பெறுவதை நிர்ணயிக்கும் என்பதை அன்னை வலியுறுத்தியுள்ளார்.

ஒரு IAS ஆபீசர் மத்திய மந்திரிக்கு personal secretary ஆக இருந்தார். எலக்ஷன் வந்தது. மந்திரி தோற்றார். இவர் மாநில ஆபீசர். மந்திரியும், இவரும் பால்ய நண்பர்கள் என்பதால் P.S. பதவி வந்தது. புது எலக்ஷனில் மந்திரிசபை அமைந்தது. தோற்றவர் டெபுடி மந்திரி. புதிய மந்திரி சபையில் காபினட் மந்திரிக்கு P.S. வேண்டும். அருகிலிருந்தவர் இந்த IAS ஆபீசர் பெயரைச் சொன்னார். மந்திரி ஒத்துக்கொண்டார். அடுத்த நாள் மந்திரியிடம் வேறொருவர் போய் இந்த IAS ஆபீசர் கலைக்டர் பதவியில் இருக்க வேண்டியதை முடிக்கவில்லை என்றார். மந்திரி மனம் மாறினார். வாழ்வில் வரும் பெரிய அதிர்ஷ்டங்கள் சிறு நிகழ்ச்சிகளின் குறுக்கீட்டால் கெட்டுவிடுவதை நாம் அறிவோம். அன்னை புறநிகழ்ச்சிகளின் குறுக்கீட்டைக் குறிப்பிடவில்லை. நம் மனநிலை 10 நிமிடத்தில் 20 வகைகளாக மாறுகிறது. அதையே குறிப்பிடுகிறார்.

1963இல் அன்னை ஸ்ரீ அரவிந்தரை சூட்சும உலகில் சந்திப் பதைப் பற்றிப் பேசுகிறார். அன்னையும் ஸ்ரீ அரவிந்தரும் 1950க்கு முன் உரையாடும் பொழுது அடுத்தவருக்குப் புரியாது என்கிறார். ஒருவர் பேசியதையொட்டி 4, 5 நிலைகள் கடந்து அடுத்தவர் பதில் சொல்வதும் மீண்டும் பல இடைநிலைகளைக் கடந்து அடுத்தவர் தொடர்வதும் எங்களுக்கு மட்டுமே புரியுமே தவிர கேட்பவர்கட்குப் புரியாது என்கிறார். அன்னை பேசியபொழுது ஸ்ரீ அரவிந்தர் சத்திய ஜீவியப் பதிலைத் தர முயன்றார். அன்னை தலையை அசைத்தார். அவ்வசைவு அன்னை மனநிலையை மாற்றி சத்திய ஜீவியம், தெய்வ

லோகம், ரிஷிநிலை, யோகி நிலைகளைக்கடந்து முனிவர் நிலைக்கு வந்து மனிதனுடைய சத்வகுணத்தை எட்டியது. க்ஷணநேர மாற்றம் சூழலை அத்தனை தூரம் இறக்கியது. எதிரேயிருந்த ஸ்ரீ அரவிந்தர் மாறி டாக்டராகக் காட்சியளித்தார் என்கிறார் அன்னை.

பலகோடிச் சொத்துள்ள பெரியப்பா, வசதியற்ற தம்பி மகனைக் கணக்கெழுத அழைக்கிறார். கணக்கை ஒழுங்காக எழுதி பெரியப்பா கொடுத்த வேலையை விட்டுவிடக்கூடாது என சிறுவன் இடைவிடாது அன்னையை அழைத்து வேலையை நெறியாகச் செய்கிறான். கணக்கு எழுதும் வேலை அன்னை நாம ஜபத்தால் மனம், முனிவர், ரிஷி, யோகி, தெய்வநிலைகளைக் கடந்து நாம ஜெபமுள்ள நேரம் பையனின் சூழலைச் சத்திய ஜீவியத்திற்குக் கொண்டு போகிறது. பெரியப்பாவும், பெரியம்மாவும், பிள்ளையில்லாததால் தம்பி மகனைச் சுவீகாரம் எடுத்துக்கொள்ள முடிவு செய்கின்றனர்.

வேலை சேவையாகி, சம்பளம் சுவீகாரமாவது அன்னையின் அருள்.

இதுபோல் நடந்த ஏராளமான நிகழ்ச்சிகளை அன்பர்கள் அறிவார்கள். "ஆயிரம் முறை நான் உங்களைத் தேடிவந்தால் அத்தனை முறையும் நான் உங்களை அணுகும்பொழுது சூழலை ஏதாவது சிறிய தவற்றால் பாழாக்கி விடுகிறீர்கள்" என்று அன்னை கூறியதுண்டு. மேற் சொன்ன உதாரணத்தில் சுவீகாரத்திற்காக அழைத்துவந்த பையன், பெரியவர்கள் பேசும்பொழுது, சில்லரையாக மனதை ஒட்டினால்,

சுவீகாரம் சம்பளமாக மாறுகிறது.

* எந்த நேரமும் அன்னை நம்முள் வர அருகில் காத்திருக்கிறார்.
* நம் மனம் உயர்வாக இருந்தால் அருளும், தாழ்வாக இருந்தால் சிறியதும் கிடைக்கும்.

மனம் அன்னையில் மட்டும் நிலைப்பது ஜீவனை அருளுக்குரிய தாக்குகிறது.

The spiritual fullness of being is eternity

ஜீவனின் ஆன்மீக நிறைவு காலத்தை வெல்லும்

நாம் வாழ்க்கையை எப்படி நடத்துகிறோம்? நம் கையில் எதுவுமில்லை. ஏதாவது ஒரு விஷயம் கூடிவந்தால் அது அதிர்ஷ்டம் என்பது நம் நிலை. பெண் மனம் அடிமை என்ற கருத்தை விளக்க அவள் ஒவ்வொரு பருவத்திலும் தகப்பனார், கணவன், மகன் ஆதரவிலிருக்க வேண்டும் என்று அந்த நாளில் சொல்வதுண்டு. சாதாரண மனிதன் ஆபீஸில் வேலை செய்தால், ஆபீசுக்குக் கட்டுப்படவேண்டும். ரோட்டில் போனால் சட்டத்திற்குக் கட்டுப்பட வேண்டும். கட்சியிலிருந்தால் கட்சிக்குக் கட்டுப்படவேண்டும். வீட்டில் தலைவருக்குக் கட்டுப்பட வேண்டும். சாதாரண மனிதன் வீட்டில் தலைவராக இருந்தாலும் அடுத்தவர் பேச்சைக் கேட்க வேண்டும்.

சாதாரண மனிதனுக்கு எங்கும், எப்பொழுதும் சுதந்திரம் இல்லை.

தலைவன், கெட்டிக்காரன், முதலாளி, பணக்காரன், அதிகாரி போன்றவர்க்குச் சுதந்திரம் உண்டு. தலைப்பிலுள்ள கருத்தில் ஜீவனின் நிறைவைப்பற்றி பகவான் எழுதுகிறார். நிறைவு உடல், உணர்வு, மனம், ஆன்மா என்ற நிலைகளில் உண்டு. உடல் நிறைவு பெற்றால் ஆரோக்கியமும், உணர்வு நிறைவு பெற்றால் சந்தோஷமும், மனம் நிறைவுபெற்றால் தெளிவும் ஏற்படும் என நாம் அறிவோம்.

பகவான் ஜீவனுடைய ஆன்மீக நிறைவைக் குறிக்கின்றார்.

இதன் உட்கரு ஸ்ரீ அரவிந்தம். இதன்படி, சாதாரண மனிதன் காலத்தை வெல்லமுடியும். சாதாரண மனிதன் எல்லா இடங்களிலும் பிறருக்குக் கட்டுப்படுபவன். காலத்தை வெல்ல யாராலும் முடியாது.

யாராலும் வெல்ல முடியாத காலத்தை ஸ்ரீ அரவிந்தம் சாதாரண மனிதனால் வெல்ல முடியும் என்று கூறினால் அதை நாம் புரிந்து பயனடையலாம்.

விஞ்ஞானமும், **technology**யும் ஒரு காலத்தில் எவராலும் முடியாத காரியத்தை அடுத்த காலத்தில் எவருக்கும் முடியும் என்ற நிலையை ஏற்படுத்துவதை நாம் அறிவோம். விஞ்ஞானம் வருமுன் அரசர்களும் அனுபவிக்காத வசதிகளை இன்று பாமரர்களும் அனுபவிக்க முடிகிறது.

விஞ்ஞானம் வசதியில் நமக்களித்ததுபோல் ஸ்ரீ அரவிந்தம் வாழ்வில் கனவிலும் காணமுடியாத பலனைத் தருகிறது.

ஏழைச் சொல் அம்பலம் ஏறாது என்பது இன்றும் முழு உண்மை. காலத்தை வெல்லுதலுக்குச் சில உதாரணங்களைச் சொல்லலாம். வெகு நாளில் நடப்பதைக் குறுகிய காலத்தில் செய்வது காலத்தை வெல்வதாகும். அந்தக் காலத்தில் முடியாததை இன்று செய்ய முடிவதும் காலத்தை வெல்வதாகும். 6 மாதத்தில் பெறும் லைசன்ஸ் பெற சாதாரண மனிதனுக்கு 2 வருஷமாகும். அவனுக்கு அது 6 மாதத்தில் கிடைத்தால் அவன் காலத்தை வென்றவனாவான். அன்னையை அழைப்பது உடலையோ, உணர்வையோ, மனத்தையோ நிரப்புவதைவிட ஆன்மாவைப் பூர்த்தி செய்யும்.

அழைப்பு ஜீவனின் ஆன்மீக நிறைவு.

அழைப்பை மேற்கொண்டவரின் ஆரோக்கியமும், சந்தோஷமும் பெருகுவதைக்கண்டு தொடர்ந்தார். தெளிவு நிறைவுபெற்றது. அடுத்தாற்போல் அவர் பெற்றது என்ன என்று அவர் அறியவில்லை. நிறைவாக இருந்தது. அன்று அவர் கடையில் 3 நாளைய வியாபாரம் ஒரே நாளில் நடந்தது. 3 நாள் ஒரு நாளாக சுருங்குவது காலத்தை வெல்வதாகும். ஜீவனை ஆன்மா நிறைவுபெறச் செய்யும் வழிகளில் மேற்சொன்னது ஒன்று. இடையறாத நினைவும் அதைச் செய்யும்.

அதை மேற்கொண்ட ஒருவர் தம் தொழில் சம்பந்தமான கூட்டத்திற்குப் போனார். அங்கு முதல் வரிசையில் உட்காருபவரில்லை இவர். இவர் பெறும் நிறைவு ஆன்மநிறைவு. கூட்டத்துடன் கூட்டமாக உட்கார்ந்திருந்தவரை மேடைக்கு அழைத்து மரியாதை செய்தனர். எளிய மனிதனுக்கு எதிர்காலத்தில் மரியாதை வரலாம். இன்றில்லை. ஜீவன் நிறைவு பெற்றதால் எதிர்காலம் இவர் வாழ்வில் நிகழ்காலமாயிற்று.

ஸ்ரீ அரவிந்தம் எளிய மனிதனுக்குக் காலத்தை வெல்லும் தகுதியை அளிக்கிறது.

❊ ❊ ❊

ஸ்ரீ அரவிந்த சுடர்

நோயாலும், வேதனையாலும் உடல் திருவுருமாற்றமடைகிறது.

அடுத்த மாதத்தில் வரும் தரிசன நாள்

ஏப்ரல் 24 — அன்னை பாண்டியில் நிலையாக தங்க வந்த நாள்

அன்பர் கடிதம்

வணக்கம். கடந்த நான்கு ஆண்டுகளாக அன்னையை வழிபட்டு மேன்மை அடைந்து வருகிறேன். தாங்கள் மங்கையர் மலரில் அன்னையின் மகிமையை எழுதி வருகிறீர்கள். “அன்னையின் தரிசனம்” என்ற நூல் பக்தர்கள் அதிகமாக விரும்பிப் படிக்கின்றார்கள் என அதில் குறிப்பிட்டு இருந்தீர்கள். இந்நூலை இரண்டு நாட்களுக்கு முன் ஓர் அன்னை பக்தரிடம் இருந்து பெற்றுப் படித்தேன். அந்நூலைப் படித்ததும் என் வாழ்விலும் அன்னை புரிந்துள்ள அற்புதங்களை நன்கு உணர்ந்து எடுத்துக் கூறுகிறேன்.

நான் ஒரு தனியார் கல்லூரியில் நூலகராகப் பணிபுரிந்து வருகிறேன். நான் பணியாற்றிக் கொண்டு இருக்கும் ஊரில் சொந்தமாக வீடு அல்லது மனை வாங்க முற்பட்டேன். பல வருடங்களாக முயன்றும் தாமதித்து வந்தது. என் மகனின் உயர்நிலைப் படிப்புக்காக அருகில் உள்ள கும்பகோணம் நகரத்திற்குக் குடிவர முயன்றேன். வாடகைக்கு வீடு கிடைக்கவில்லை. அப்பொழுது எங்கள் கல்லூரி மாணவி ஒருவர் மூலம் அந்நகரத்தில் ஒரு காலனியில் வாடகை வீடு கிடைத்தது. அக் கல்லூரி மாணவி அன்னை பக்தர் என்பதும், அக்காலனியில் ஒரு வீட்டில்தான் மாதந்தோறும் அன்னை வழிபாடு நடைபெறுகிறது என்பதும் பிறகுதான் நான் அறிந்து கொண்டேன். அக்காலனியில் உள்ள ஒரு பெண்மணி மூலம் எங்கள் குடும்பத்திற்கு அன்னை அறிமுகமானார். அதன்பிறகு அன்னை படத்தைப் பெற்று பூஜை செய்ய முற்பட்டோம். அனைவரும் அன்னை பக்தரானோம். சில மாதங்களில் எங்களுக்கு என்று சொந்தமாக வீடு கிடைத்தது. அவ்வீட்டில் மூன்று ஆண்டுகளாக வசித்து வருகிறோம். அனைவரும் நலமுடன் இருக்கிறோம்.

அதன்பிறகு என் தொழிலில் மேன்மை ஏற்படத் தொடங்கியது. எங்கள் பல்கலைக் கழகத்தில் 3 ஆண்டுகளுக்குப் பிரதிநிதியாக **(senate member)** தேர்ந்தெடுக்கப்பட்டேன். சென்ற மூன்று ஆண்டு

களில் எங்கள் கல்லூரி நூலகர்களுக்கும், எங்கள் கல்லூரி மாணவர்களுக்கும் என் பணி மிகவும் பயன்படும்வகையில் அமைந்து மன நிறைவோடு என்னால் முடிந்த அனைத்துப் பணிகளையும் செய்து கொடுத்தேன். ஆசிரியர் மாணவர்கள் என்னை பாராட்டும்வகையில் அப்பணி அமைந்திருந்தது.

என் பாடத்தில் முதுநிலை பட்டம் எதிர்பார்க்கும் விழுக்காட்டுடன் தேர்ச்சி அன்னையின் அருளால் அமைந்தது.

வானொலியில் சொற்பொழிவு ஆற்ற சந்தர்ப்பமும் கிடைத்தது. அதனையும் சிறப்பாகச் செய்து முடித்தேன்.

பிற பல்கலைக்கழகங்களில் விடைத்தாள் திருத்தும் பணி, வினாத்தாள் அமைக்கும் பணி கேட்டு அன்னையிடம் பிரார்த்தனை செய்தேன். ஆனால் அன்னையோ என்னை தமிழ்நாடு தேர்வு ஆணைக்குழுவில் ஒரு முக்கியப் பாடத்திட்ட அமைப்பாளராக நியமித்து எனக்கு உயர்ந்த நிலையைக் கொடுத்துவிட்டார். இப்பணியை மிகவும் கவனத்தோடும், சிறப்பாகவும் நல்ல முறையில் செய்து கொடுத்தேன். அதன்பிறகே ஒரு பல்கலைக் கழகத்திலிருந்து விடைத்தாள் திருத்தும் பணியும் கிடைத்தது. அதனையும் மிக்க கவனத்துடன் செய்து கொடுத்தேன். இனி பிற பல்கலைக் கழகங்களிலிருந்து வினாத்தாள் அமைக்கவும், விடைத்தாள் திருத்தவும் வாய்ப்பு கிடைக்கவேண்டும் என்று அன்னையிடம் பிரார்த்தனை செய்து கொள்கின்றேன்.

என் பாடத்தில் **Ph.D.** பதிவு செய்து கொள்ள கடந்த இரு ஆண்டுகளாக முயன்றும் இதுவரை அதற்கான வாய்ப்பு கிட்டவில்லை. அதற்கு வேண்டிய அனைத்து முயற்சிகளையும் தொடர்ந்து மேற்கொண்டு வருகின்றேன். என் கோரிக்கைகளை ஒவ்வொன்றாக, நிதானமாக, படிப்படியாக நிறைவேற்றி வைத்த அன்னை இதனையும் நிறைவேற்றி வைப்பார் என்று எதிர்பார்த்துள்ளேன்.

❊ ❊ ❊

"அன்பர் உரை''

இன்பமயமான சாதனை

Enjoyment is Accomplishment

(சென்னை-பெரம்பூர் ரிஷி இல்லத் தியான மையத்தில் 26.9.99 அன்று திருமதி உஷா ராமதாஸ் நிகழ்த்திய உரை)

நெற்றி வேர்வை நிலத்தில் விழும்படி உழைத்து மனிதன் முன்னுக்கு வருகிறான். அகந்தையுள்ளவரை, சாதிக்க மனிதன் முயலவேண்டும், உழைத்து முன்னேற வேண்டும், பாடுபட வேண்டும். அகந்தை அழிந்த பின் சாதிக்க மனிதன் ஆனந்தப்பட வேண்டும். ஆனந்தம் உயர்ந்தால் சாதனை உயரும் என்பது அன்னையின் யோகம்.

பகவான் ஸ்ரீ அரவிந்தரும், அன்னையும் செய்த யோகத்தில் அவர்கள் உடல் அனலால் வெந்தது. இரவு பகலாக தழலுள் இருந்தனர். சாதனை ஆனந்தமயமானது எனில் ஏன் அவர்கள் யோகம் வேதனையை அளித்தது? தங்கள் அகந்தையை அழித்த பின் யோகி உலகத்தின் அகந்தையை ஏற்கிறான். அதனால் அவர்கள் வேதனையை அனுபவித்தனர்.

வேத காலத்திலிருந்து இந்தியர் அறிந்த ஆன்மீகத் தத்துவம் இது என்றாலும், நடைமுறையில் உதாரணமாகக் காட்ட உலகில் நிகழ்ச்சிகளில்லை என்பதால், சிறு குழந்தையின் அனுபவத்தையும் அன்பர்கள் மனம் மலர்ந்த நேரம் பெறும் அனுபவத்தையும் தவிர வேறு எதையும் நாம் கூற இயலாது. எல்லா அன்பர்களும் அன்னையை அறிந்த ஆரம்பத்தில் பெற்ற அனுபவம் இது. ஆனால் அவர்கள் கூறும் வகை வேறு.

‘‘நான் 7 வருஷத்திற்குமுன் ஆசிரமம் வந்தேன். எனக்கு எதுவுமே தெரியாது. வந்தவுடன் நான் பெற்ற மனநிம்மதி, சுகம் ‘‘இனி அன்னையில்லாமலிருக்க முடியாது’’ எனத் தோன்றியது. எனக்கு பிரச்சினை என எதுவுமில்லை. பிரார்த்தனை செய்யத் தோன்றவில்லை. சமாதிக்கு வந்தால் ஆனந்தம் பொங்கிவிடும். அது என் முகத்தில் தெரியும். இப்பொழுது யோசனை செய்து பார்த்தால் எனக்கு நடந்த நல்லதெல்லாம் அப்பொழுதுதான் நடந்திருக்கிறது. நான் பிரார்த்தனை செய்ததாக நினைவில்லை. நான் வீடு கட்ட நினைக்கவில்லை. பலரும் கட்டலாம் என்றனர். இன்றுகூட எப்படி வீடு கட்டினேன் என நினைத்தால் ஆச்சரியமாக இருக்கிறது. நானே முயன்று கட்ட வேண்டுமானால், நினைத்தும் பார்க்க முடியவில்லை. என்னால் இவ்வளவு பெரிய வீடு கட்டியிருக்க முடியுமா எனப் பிரமிப்பாக இருக்கிறது. அதுவே சிறியது. மற்றனவெல்லாம் அதைவிடப் பெரியவை. நான் அவற்றை நினைத்தும் பார்க்கவில்லை. தாமே நடந்தன. தாமே கூடி வந்தன’’.

சாதனையின் அளவு பெரியதாகும்பொழுது முயற்சி குறைந்து முயற்சியே இல்லாமல் நடக்கின்றன என்பதை இதுபோன்ற அனுபவங்கள் காட்டுகின்றன. இதுவே யோகதத்துவம். முயற்சியில்லை என்பதுடன் காரியங்கள் முடியும்பொழுது பொறுப்பும் நம்மதில்லை எனத் தெரியும். காரியம் முடிந்தபின் சந்தோஷம் வருவது இயற்கை. ஆனால் அன்னையால் காரியங்கள் நடக்கும்பொழுது ஆனந்தம் முதலிலேயே வந்துவிடும். அவை நடைபெறும்பொழுது ஆனந்தமாக இருக்கும். நடந்தபின்னும் ஆனந்தமயமாக இருக்கும்.

‘‘உலகம் ஆனந்தத்தால் சிருஷ்டிக்கப்படுகிறது. செயல்கள் ஆனந்தத்தால் இயங்குகின்றன. முடிவாக அவை ஆனந்தத்தை நாடுகின்றன’’ என உபநிஷதம் கூறுகிறது. உபநிஷதம் கூறும் ஆனந்தம் பேரின்பம், சிற்றின்பமில்லை. உபநிஷதம் கூறும் ஆனந்தம் **Bliss** சச்சிதானந்தத்தின் பேரானந்தம். ஸ்ரீ அரவிந்தம் கூறும்

ஆனந்தம் அதைவிடப் பெரியது. பேரின்பத்தைவிடப் பெரிய ஆனந்தமான சிருஷ்டியின் ஆனந்தம் (**delight**). மேலுலகிலுள்ள பேரின்பத்தை நம் வாழ்வில் வெளிப்படுத்த சச்சிதானந்தம் முயன்று வெற்றி பெறுவது, இதுவரை உலகில் எவரும் அறியாத ஆனந்தம். இன்று விமானத்தில் சாதாரண மனிதர்கள் போகிறார்கள். அன்று அரசனோ, சக்ரவர்த்தியோ அறியாத சௌகரியம் அது.

* சத்திய ஜீவியம் உலகில் வந்தபின் அன்பர்கள் அனுபவிக்கும் ஆனந்தம் இது.
* தங்களை மறந்திருந்த நேரத்தில் (அகந்தையை முன்னுக்கு வைக்காத பொழுது) அன்னை அருள் செயல்பட்டு நம் வாழ்வில் நடத்திய அற்புதங்கள் அநேகம். பிறகு நாம் அன்னையை அறிந்தபிறகு, அதுபோன்ற நிகழ்ச்சிகளை எதிர்பார்க்கிறோம். எதிர்பார்ப்பதன் மூலம் ''நாம்'' வந்துவிடுகிறோம். ''நாம்'' வந்தபின் அன்னை செயல்படுவதில்லை. அத்துடன் அருள் நின்று விடுகிறது. மேலும் அருளை மனம் நாடினால், "நாம்" அகல வேண்டும்.

நாம் மேல் மனத்தில் மனத்தால் காலத்தில் அகந்தைமூலம் சிறியதாக (**finite**) வாழ்கிறோம். அருள் இவை மூலம் வெளிப்படாது. இவை 5உம் அருளுக்குத் தடை. ஆழ்மனத்தில் மனம் விசாலமடைகிறது. காலத்தைக் கடக்கிறோம். அகந்தை நகர்ந்து சைத்திய புருஷன் வருகிறான். சிறியது (**finite**) பெரியதாகிறது (**infinite**). பாலிடெக்னிக்கில் சேரப் போனவனுக்கு இன்ஜினீயரிங் காலேஜில் இடம் கிடைக்கிறது. பாங்க் கிளார்க் உத்தியோகம் கிடைக்காதவனுக்கு பேங்க் ஏஜண்ட் வேலை கிடைக்கிறது. டீலர்ஷிப் கிடைக்கவில்லை என்றவர் கம்பனி டைரக்டரானார்.

நாம் எப்படியிருக்க வேண்டும் என்று கேள்வி எழுகிறது? ஒரு குழந்தை அன்னையிடமே இந்தக் கேள்வியைக் கேட்டது. "குழந்தைகளாகிய நாங்கள் அன்னையிடம் என்ன கேட்கலாம்?" என்று கேட்டது அக்குழந்தை. எதையும் கேட்கலாம் என்றார்

அன்னை. குழந்தைகள் கேட்பவை அனைத்தையும் அன்னை உடனே தருகிறார். அவர்கட்கு அகந்தையில்லை என்பதால் அன்னையைக் கேட்டு வாய் மூடு முன் அது பலிப்பதைக் காண்கிறோம்.

நம் பிரார்த்தனைகள் அனைத்தும் நம் தேவைகள், நம் ஆசை பூர்த்தியாகப் பிரார்த்திக்கின்றோம். தேவைகளும், ஆசைகளுமே நம் வாழ்வை நிரப்பியுள்ளன. அவை பூர்த்தியாகாதபொழுது நமக்கு அன்னை நினைவு வருவதில்லை. அவ்வளவும் சுயநலமான பிரார்த்தனைகள். அத்தனையும் பலிக்கின்றன. நாம் எந்த நிலையிலிருந்தாலும், அன்னை அந்த நிலையை ஏற்கிறார். நம் பிரார்த்தனையைப் பூர்த்தி செய்கிறார்.

சுயநலத்தைவிட்டு பிறநலம் நாடுவது, அகந்தையைவிட்டு ஆன்மாவை நாடுவது, சிறியதைக் கடந்து பெரியதை நாடுவது நம் இலட்சியமானால், அன்னை நம் இலட்சியத்தைப் பூர்த்தி செய்கிறார். மேலே போகப் போக முயற்சி குறைவு. சாதனை அதிகம். பாடு இல்லை. பாடே ஆனந்தமாகிறது.

அன்பர்களுக்கு இந்த அனுபவம் அவர்கள் அறியாமல் முதலில் உண்டு. இன்று அதுவே நிலைத்திருக்க வேண்டுமானால் மேற்சொன்ன 5 கட்டங்களை நாம் தாண்டவேண்டும். காலம், மனம், மேல் மனம், அகந்தை, சிறியது ஆகிய 5.

1) காலத்தை நாம் அறிவோம். கடந்ததை ஆழ்ந்து நினைக்கிறோம். எதிர்காலத்திற்கு யோசனை பிறக்கிறது. கடந்தது, நிகழ்காலம், எதிர்காலம் என்ற நிலைகள் காலத்திற்குட்பட்டவை. கடந்ததை மறந்து, எதிர்காலத்தை நினைக்காமல் இன்றுள்ள நிலைமையில் தம்மை மறந்து நாம் செயல்படும் நேரம் நாம் காலத்தைக் கடக்கிறோம். (Past and future disappear giving way to the ever present). நம் சொந்த பாணியில் சொல்வதானால்,

   "நான் எதையுமே நினைக்கவில்லை. எல்லாம் தாமே நடந்தன" என்ற நிலை அது.

2) மேல் மனம்

ஆயிரம் எண்ணங்கள் மனத்தில் ஓடியபடியிருக்கும். அவற்றுள் ஒன்றையும் நம்மால் கட்டுப்படுத்த முடியாது. இது மேல் மனம். எண்ணங்கள் அடங்கிய நிலையில் நாம் மேல் மனத்திலிருந்து, ஆழ்மனத்தை அடைகிறோம். மனம் மௌனமாகிறது.

3) அகந்தை என்ன என்பதை நாம் அறிவோம். அதனின்று அறவே விலக வேண்டும். சுயநலம், கர்வம், அவசரம், எரிச்சல், போட்டி, பொறாமை, மந்தம், சந்தேகம், பொய் ஆகியவை அகந்தைக்குரியவை. பரநலம், அடக்கம், அமைதி, பெருந்தன்மை, சுறுசுறுப்பு, நம்பிக்கை, சத்தியம் ஆகியவை அகந்தையினின்று நம்மை விலக்க உதவும்.

4) மனம்

மேல் மனத்தைக் கடப்பது எளிதன்று. மனத்தைக் கடந்தவர் இதுவரை எவருமில்லை. மனிதன் என்பவன் மனத்தாலானவன். மனிதநிலை மாறி உயர்ந்தால் மனத்தைக் கடக்கலாம். முடிந்த அளவு மனத்தை விட்டு அகலாமல் மனத்தைக் கடப்பது யோகம் பலிப்பதாகும்.

5) பயம், சந்தேகம், தயக்கம் போன்ற குணங்கள் finite சிறியவற்றிற்குரியவை. தைரியம், நம்பிக்கை, தயக்கமின்றி செயல்படுதல், பெருந்தன்மை, தாராள மனப்பான்மை infinite பெரியவற்றிற்குரியவை.

தினமும் 1500ரூ சம்பாதிப்பவர் அன்னையை அறிந்தார். சுமார் 15 நாளில் நடந்ததை அவரால் நம்பமுடியவில்லை. ஏற்கவும் முடியவில்லை. பயம் வந்தது. தினமும் 30,000ரூபாய் 75 நாட்களுக்கு வரும் நிலை ஏற்பட்டது. அவர் "அன்னை" என்று கேட்டறிந்தார். விவரம் எதுவும் இருந்தால் இனி தெரிந்துகொள்ள வேண்டும். ஒருமுறை ஆசிரமம் வந்தார். எதுவுமே அறியாத நிலையில் சிறப்பான உழைப்பாளி என்பதால் அவர் வாழ்வில் நடந்த அற்புதம் இது.

நாம் அன்னையை அறிந்தபின் "நாம்" என்பதில்லாத மனநிலை பெற்றால் வாழ்நாள் முழுவதும் அதே போன்ற புற நிகழ்ச்சிகள் நடந்தபடியிருக்கும். அதையே நான் அதிர்ஷ்டம் எனக் குறிப்பிடுகிறேன். புறத்தே தெரிவது கடுகளவு. அகத்தில் எழுவது அருள். அருள் கண்ணுக்குத் தெரிவதில்லை. பொருள் தெரியும். அதனால் பொருளைக் கூறவேண்டியிருக்கிறது.

மனித வாழ்வில் உள்ள ஒரே இன்பம் மனைவி தரும் இன்பம் என்கிறார் அன்னை. மனிதன் உற்பத்தி செய்யும் ஆயிரம் பொருள்களில் தலை சிறந்தது குழந்தை. இது மனிதனுடைய சிருஷ்டி. இந்த சிருஷ்டி சிற்றின்பத்தால் எழுவது. இதுவரை மனிதன் அறிந்த பெரிய இன்பம் அதுவேயாகும். **His highest accomplishment is by the greatest enjoyment**. இது மனித வாழ்வுக்குரிய சிறிய நிலை. இதை உயர்த்தி பேரின்பம் பெறுதல் அன்னை வாழ்வாகும். உடலாலும், உணர்வாலும், மனத்தாலும், ஆன்மாவாலும், சைத்தியபுருஷனாலும் சிற்றின்பம் பேரின்பமாகும்பொழுது சாதனை இன்பமயமாகிது.

சாதனை என்பது இன்பமாகும். Accomplishment is enjoyment.
இன்பம் என்பது சாதனையாகும். Enjoyment is accomplishment.

அகந்தை அழிந்து, காலத்தைக் கடந்து, மனத்தைக் கடந்து, ஆழ்மனம் சென்று சிறியது பெரியதாகும் நிலையில் சாதனை இன்பமயமாகிறது.

அன்னையை வணங்க ஆரம்பித்த பிறகு பிரார்த்தனை செய்யாமல் நம் பிரச்சினைகள் தாமே தீருவதை நாம் காண்கிறோம். இம்மனநிலை இன்பமயமாகச் சாதிக்கும் மனநிலையாகும்.

ஆசையை அன்னை பூர்த்தி செய்தாலும், ஆசை சிறியது, அன்பு பெரியது என நாம் அறிவோம். ஆசையை விட்டகன்று அன்பைச் செலுத்தினால் பிரார்த்தனையின்றி பிரச்சினை தீரும் சூழ்நிலை எழும்.

நம் பிரச்சினைகள் தீர அன்னையை நாடுகிறோம். அவை தீர்ந்தபின் நம் தேவைகள், ஆசைகள் பூர்த்திபெற விரும்புகிறோம். அடுத்தாற்போல் நம் அபிப்பிராயங்கள் நிறைவேற அன்னையை நாடுகிறோம். அந்தக் கட்டத்தில் காரியம் கூடிவருதல் குறைவதைக் காணலாம். இது நாம் நம்மை வலியுறுத்துவதாகும். அன்னை விரும்பும்படி நாம் நடப்பது முறை. நாம் விரும்பும்படி அன்னை நடக்க எதிர்பார்க்கும் நிலையில் பிரார்த்தனை பலிப்பதில்லை. பிரார்த்தனை பலிக்காததற்குப் பல காரணங்களிருக்கலாம். இது ஒரு முக்கியமான காரணம். **இது இருந்தால் நாம் உடனே நேர் எதிராக மாற வேண்டியது அவசியம்.**

பலரும் சந்திக்கும் மனநிலை இது. பொதுவாக இக்கட்டத்தில் பிடிவாதம் எழும். பிடிவாதம் வளர ஆரம்பிக்கும். எதுவுமே நடக்காது. அந்நிலை ஏற்பட்டால், நாம் மாற வேண்டும் எனப் பொருள்.

எப்பொழுதும் குழந்தைகள் சந்தோஷமாக இருக்கக் காரணம் அவருடலில் சக்தி பொங்கி வழிகின்ற காரணத்தால், குழந்தைகள் நடப்பதில்லை. துள்ளி ஓடுகின்றன.

சக்தி பொங்கி வழிந்தால், சந்தோஷம் பொங்கி வழியும்.
சந்தோஷமிருந்தால், சாதனை பெருகும்.

நமக்கு எப்படி சக்தி பொங்கி எழும்? செய்யும் காரியத்தில் திறமை பெற்றால் (**skill**) எழும். ஆர்வமிருந்தாலும் சக்தி பொங்கும். அப்படி நாம் சந்தோஷமாக இருக்கும்பொழுது யாராவது ஒரு தவறான சொல்லைச் சொன்னால், மனம் சுருங்கி வாடி விடுகிறது. இதைத் தடுக்க என்ன வழி?

நம் குழந்தைகள், நமக்குப் பெரியவர்கள், குரு, வீட்டு மனிதர்கள், நமக்கு வேண்டியவர்களிடம் குறைகள் பல உண்டு. ஆனால் அவற்றைக் கருதவே கருதாமல், அவர்களைச் சந்தோஷப் படுத்த முயல்கிறோம். அவர்களால் நாம் சந்தோஷப்படுகிறோம். அவர்கள் வாயால் தவறான சொல் ஒன்று வந்தால், நாம் எப்படியாவது

அதை மறைத்து, மீறி, சந்தோஷப்பட முயன்று வெற்றி பெறுகிறோம். அனைவரிடமும் இக்கொள்கையைப் பின்பற்றுபவர்க்கு, பழகும்பொழுது சந்தோஷம் அபரிமிதமாக இருக்கும்.

நாம் செய்யும் பல வேலைகளைச் சரியாகப் புரியாமல் எப்படியோ செய்து முடித்துவிடுகிறோம். அவற்றைப் புரிந்துகொண்டால் வேலையில் ஆர்வம் எழும். மணி 7 ஆனாலும் ஆபீசை விட்டுப் போக மனம் வாராது.

சாதனைக்குரிய காரணங்கள் பல. அவற்றுள் சிறந்தது சந்தோஷம்.

* அதிகமாகச் சாதித்தவர் வாழ்வைக் கவனித்தால், அவருள் பலர் சந்தோஷமான இயல்புள்ளவராக இருப்பார்கள்.
* பிறரை மகிழ்விப்பதே நோக்கம் என்று கொண்டால், காரியங்கள் எளிதில் முடிவதைக் காணலாம். காரியங்களை எளிதில் முடிப்பவர்கள் பலருக்குப் பிறரை மகிழ்விக்கும் குணம் உண்டு.
* தலைவிதியே என்று செய்யும் வேலையைக் கடமையாகச் செய்தாலும், கடமையாகச் செய்வதை ஆர்வமாகச் செய்தாலும், ஆர்வமாகச் செய்வதை சமர்ப்பணமாகச் செய்தாலும், சாதனை உயர்வதையும், சந்தோஷம் அதிகரிப்பதையும் காணலாம்.
* கெட்டவர்களின் கெட்ட குணத்தை விலக்கி, அவரிடம் பிரியமாக இருப்பதும், நல்லவரிடம் அவர் நல்ல குணத்தை விலக்கி, அவரிடம் பிரியமாக இருப்பதும், மனிதனை, மனிதனாகக் கருதாமல் ஆன்மாவாகக் கருதுவதாகும். இதை நெருங்கிய உறவில் கடைப்பிடித்தால், ஆசை அன்பாகவும், அன்பு செலுத்துவது ஆன்மாவையும், ஆண்டவனையும் நெருங்குவதாகும்.
* அன்பு கெட்டதைவிட, நல்லதையும் விட உயர்ந்தது. சாதிக்கவல்லது.
* அருளாகப் பெறுவதைப் பிறருக்கு அளித்தால் அது அன்பாகிறது.

* அன்பைச் செலுத்தினால் அருள் அதிகமாக நம்மை நாடும்.
* அன்பைச் செலுத்துவதும், அருளைப் பெறுவதும், ஆர்வமாகச் செயல்படுவதும், திறமையைப் பெற முயல்வதும், செய்யும் காரியங்களைப் புரிந்து கொள்வதும், பிறரை மகிழ்விப்பதும், இன்பமயமான சாதனைக்கு வழி கோலுவதாகும்.

உலகத்தைச் சிருஷ்டித்தவன் ஆண்டவன். ஆனந்தத்திற்காக உலகைச் சிருஷ்டித்து, க்ஷணம் தவறாது ஆனந்தத்தை அனுபவிப்பவன் இறைவன்.

சத்து, சித்து, ஆனந்தம் என்பவை சச்சிதானந்தம். சத் உடலாகவும், சித் வாழ்வாகவும், ஆனந்தம் ஆன்மா (சைத்திய புருஷன்) வாகவும், சத்தியஜீவியம் மனமாகவும் சிருஷ்டியில் மாறுகின்றன. நம் வாழ்வில் ஆனந்தத்தை அறியக் கூடியது ஆன்மா. ஆன்மா ஆணவ மலத்தால் பீடிக்கப்பட்டுள்ளது. ஆணவம் கரைந்தால் ஆன்மா அதிலிருந்து விடுபடுகிறது. அதன்பின் ஆன்மா மீது மனம் எனும் திரை உள்ளது. மனம் மௌனமானால் மேல் மனம் விலகும். மனம் சிந்திப்பதை மறுத்தால் சிந்தனையிலிருந்து ஆன்மா விடுபடும். சிந்திக்கும் திறனையே மனமிழந்தால் ஆன்மா மனத்திலிருந்து விடுபடும். **Mental psychic** மனத்திலுள்ள சைத்திய புருஷன் வெளிவருவான். அவன் ஆனந்தத்தைப் பெறுவான். ஞானிகள் பெற்ற இன்பத்தைவிட இது ஒரு படி அதிகமானது.

மனத்திரை விலகிய பின் ஆன்மா மீது உணர்வு (**vital**) படிந்திருக்கும். உணர்வைக் கட்டுப்படுத்துவது விரதம். விரதம் ஆனந்தம் தாராது. உணர்வைத் திருவுருமாற்றினால் உணர்வு ஆன்மா மீதிருந்து விலகும். **vital psychic** உணர்வின் ஆன்மா ஆனந்தத்தைப் பெறும். மீராவும், ஆழ்வார்களும் பெற்ற ஆனந்தத்தைவிட ஒரு படி அதிகமான நிலையிது. இந்நிலையில் விஷம் சாப்பிட்டாலும் விஷம் முறியும், உயிர் போகாது.

உணர்வும் விலகியபின் ஆன்மா மீது உடலின் திரை மூடியிருக்கும். இதுவரை யோகத்தால் உடலை வெல்ல முயன்றவரில்லை. ஸ்ரீ அரவிந்தர் (**yoga of body**) உடலின் யோகத்தை செய்தார். அதிலும் வெற்றி பெற்றார். அப்பொழுது **physical psychic** உடலின் ஆன்மா வெளிவந்து ஆனந்தத்தை நேரடியாகப் பெறும். இதற்கடுத்த கட்டம் உண்டு. உடலில் (**consciousness, substance**) ஜீவியம், உடல் என இரு பகுதிகள் உள்ளன. ஸ்ரீ அரவிந்தர் ஜீவியத்தை வென்றார். அன்னை அதற்கடுத்த நிலையான உடலில் சென்று யோகத்தைத் தொடர்ந்தார். ஒரு நாளில் 2, 3, நிமிஷம் வெற்றி கிட்டும். அந்நேரம் அன்னை ஆண்டவனாக மாறினார், அது போல் 15 நிமிஷமும் இருந்தார். ஒரு சமயம் 1 நாள் முழுவதும் அந் நிலையிலிருந்தார். அதுவே சிருஷ்டியின் கடைசி நிலை. உடலின் ஆன்மா நேரடியாக ஆனந்தத்தைப் பெறுவதாகும். அதைக் கண்ட அன்னை,

"ஒகோ! இறைவன் இப்படித்தான் ஆனந்தத்தை அனுபவிக்கிறான் போலும்'' என்று கூறினார்.

அந்நிலையில் வெற்றியும் தோல்வியும் மாறிமாறி வரும்பொழுது தோல்வி உடலை அரிப்பதால் அன்னையின் உடல் சிருஷ்டியின் அக்னியால் வெந்தது. "இந்த யோகத்தைச் செய்யும்படி நான் எவரையும் அழைக்க மாட்டேன்" என்றார்.

இக்கட்டுரையில் நான் கூறும் ஆனந்தம் மனம் பெறும் ஆனந்தமன்று. அது யோகத்திற்குரியது. அதற்கு முந்தைய நிலையில் நல்ல மனிதன், தூயமனத்துடன் பொறுப்பும், கடமையும் நிறைந்து செய்யும் செயல்கள் 100% பூர்த்தியாவதால் பெறும் இன்பம்.

அன்னையை ஆழ்ந்து நினைத்தால் அவ்வின்பம் எழும். அது தானே சாதிக்கும்.

❊ ❊ ❊

"அன்னை இலக்கியம்''

பாதை புலப்பட்டது

T.S. இராமானுஜன்

தன் இரண்டரை வயது மகள் தீபாவைத் தூங்கவைத்துவிட்டு, மணியைப் பார்த்தாள் விமலா. மணி இரவு ஒன்பதரை. அவள் கணவன் சுரேந்தர் இன்னும் வீடு திரும்பவில்லை. எண்ணங்களைப் பின்னோக்கி ஓடவிட்ட விமலா, நான்கு வருடங்களுக்கு முன் நடந்த நிகழ்ச்சிகளை நினைவு கூர்ந்து ஒரு பெருமூச்சு விட்டாள்.

அவர்களுக்குத் திருமணம் நான்கு ஆண்டுகளுக்கு முன்பு நடைபெற்றது. கல்யாணமான புதிதில் கடிகாரம் தவறினாலும், சுரேந்தர் ஆறு மணிக்கு வீடு திரும்பிவிடுவான். வந்த பிறகு, "விமல் இன்னிக்கு எங்கே போகலாம்? உன் புரோகிராம் என்ன" என்று கேட்பான். அரை மணியில் இருவரும் வெளியில் கிளம்பினார்க ளானால், ஹோட்டலில் சாப்பிட்டுவிட்டு கலகலப்பாக வீடு திரும்ப இரவு ஒன்பதுக்கு மேல் ஆகிவிடும். ஏன் தீபா பிறந்து இரண்டு வயது நிறைவதற்குக் கொஞ்சநாள் முன்னால் கூட அவர்களுடைய மேற்கூறிய நடைமுறையில் மாறுதலே இருந்தது கிடையாது. சமீப காலமாக, ஆறு மாதங்களாக சுரேந்தருக்குப் புதியதாக ஏற்பட்டிருக்கும் குடிப்பழக்கம் அவர்களுடைய வாழ்க்கையில் பல அனர்த்தங்களை ஏற்படுத்திக் கொண்டு வருகிறது.

ஆறு மாதங்களுக்கு முன்னால் விமலா தன் தாயார் விசாலாட்சியை ஆஸ்பத்திரியில் ஆபரேஷனுக்காகச் சேர்ந்திருந்த போது, தன் வீட்டைவிட்டுப் போனாள். அப்போது ஆரம்பித்தது இந்த அனர்த்தத்திற்கு அடிப்படை. விமலா எவ்வளவு நன்மைகளைச் செய்திருக்கிறாள்? தன் தாயாருக்குச் செய்யப்போகும் ஆபரேஷன் மிகவும் ஆபத்தானது என்றும், செய்யாமல் விட்டால் உயிருக்கே கூட ஆபத்தாக ஆகும் என்று எல்லோரும் என்ன செய்வது என்று

புரியாமல் திகைத்தபொழுது, விமலா பாண்டிச்சேரியில் உள்ள அன்னைக்குப் பிரார்த்தனை செய்துகொண்டாள் – "அன்னையே! என் தாயாரின் உடலைக் குணப்படுத்துவது உங்கள் அருள் ஒன்றால்தான் சாத்தியம். எனக்கு என் தாயை மீட்டுத் தாருங்கள்" என்று மனமுருகி வேண்டிக்கொண்டாள், இரவு அறையில் தன் தாயின் தலைமாட்டில் அமர்ந்து பகவான் ஸ்ரீ அரவிந்தர் எழுதிய ''சாவித்ரி'' காவியத்தை மனமுருகிப் படித்தாள். அன்றிரவு உறக்கத்தில் விமலா கண்ட கனவை இப்பொழுது நினைத்தாலும் அவளுக்குக் கண்ணீர் பெருகும். நள்ளிரவில் இரு கரிய உருவங்கள் தன் தாயைப் பற்றி இழுத்துக் கொண்டுபோவது போலவும், ஒரு வெண்மையான ஒளி தன் தாயை மீட்டுக்கொண்டு வருவது போலவும், திரும்பத் திரும்ப இந்தப் போராட்டம் பதினைந்து நிமிடங்களாக நடந்திருக்கின்றது. இறுதியில் கருஉருவங்கள் காணாமல் போய்விட்டன. அடுத்த நாள் காலை விசாலாட்சி – 'விமலா! நீ வணங்கும் அன்னையை நான் கனவில் கண்டேன். என் தலை மீது கைவைத்து ஆசி வழங்கிவிட்டுச் சென்றார்கள். பார்! இப்பொழுது எவ்வளவு தெம்பாக இருக்கிறேன்', என்றபோது அவர்கள் கண்களில் என்ன ஒளி! விமாலாவிற்குத் தான் கண்ட கனவில் அன்னை எமதூதர்களை வெற்றி கொண்டதை அறிந்து நன்றியால் உள்ளம் பூரித்தாள். அன்றிலிருந்து விசாலாட்சி அன்னை பக்தை ஆனாள்.

தீபா பிறந்ததிலிருந்து இரண்டரை வருடங்களாகப் பல சமயங்களில் தனக்குத் துணை புரிந்த அன்னை தன் வாழ்வில் சமீபத்தில் ஆறு மாதங்களாக ஏன் பலிக்கமாட்டேன் என்கிறார் என்று புரியவில்லை விமலாவிற்கு. என்னென்னவோ செய்துபார்த்தாள் – சுத்தத்தை உச்சகட்டமாக்கியாயிற்று. பேச்சைப் பாதியாகக் குறைத்தாயிற்று. விஷயம் அசைந்து கொடுக்கவில்லை.

இவ்வளவு நேரம் பின்னோக்கிப் போயிருந்த விமலாவின் நினைவுகள் மணியைப் பார்த்தன. பத்தரை மணி ஆகி இருந்தது. இன்னும் சுரேந்தர் வீடு திரும்பவில்லை. எவ்வளவு நேரம் தனியாக

அமர்ந்திருப்பாள்? அன்று நண்பகல் பார்த்த சினிமாவை அசைபோட்டது மனம். எண்ணங்களைத் தடை செய்தன வாயிற்கதவைத் தட்டும் சப்தம். திறந்துபார்த்தால், சுரேந்தரிடம் நெருங்கமுடியாத அளவு நாற்றம். ஏதும் கேட்காமல் கதவைத் தாளிட்டாள். இருவரும் சாப்பிடவேண்டும் என்ற எண்ணமே இல்லாமல் உறங்கிப் போனார்கள். விமலா வழக்கம்போல "அன்னையே! என் வாழ்வு என்றுதான் விடியப் போகிறது" என்று அரற்றிக் கொண்டே உறங்கிப் போனாள்.

மறுநாள் காலை தினசரி நடக்கும் சண்டை, முந்தைய நாள் நடந்த நடத்தையை விமரிசனம் செய்து! இறுதியாகச் சுரேந்தர் – "இதோ பார்! நான் சம்பாதிக்கிறேன்! வியாபாரத்தில் சென்ற வருடத்தைவிட இலாபம் அதிகமாகத் தேடி வந்துகொண்டிருக்கிறது! உனக்கு வேறென்ன வேண்டும்? இஷ்டம் இருந்தால் இரு இல்லாவிட்டால் வீட்டைவிட்டு வெளியே போ" என்று உறுமினான். மீதி நாட்களில், "நான் என்ன தப்பு செய்தேன்? தவறு செய்தவர்கள் தான் தண்டனை அனுபவிக்க வேண்டும். நீங்கள்தான் குடித்துவிட்டு வந்து என் நிம்மதியைத் குலைக்கிறீர்கள். ஆகையால் நீங்கள்தான் வெளியில் போகவேண்டும்" என்று சண்டை போட்டிருப்பாள். ஆனால் இன்று என்ன தோன்றியது என்று தெரியவில்லை. பதிலேதும் பேசாமல் தீபா தூங்கிக் கொண்டிருக்கிறாளே என்று கூடப் பார்க்காமல் அவளை இடுப்பில் எடுத்துக்கொண்டு தன் அம்மா வீட்டிற்குக் கிளம்பிவிட்டாள் விமலா. அடிபட்டுப் போனான் சுரேந்தர். ஆனால் அவன் விலங்கு மனம் அவள் ஆக்ரோஷத்தை அதிகப்படுத்தவே, "ஓஹோ, பதி சொல் மீறாத பத்தினியா! எப்பொழுது வீட்டைவிட்டுப் போவது என்று முடிவு செய்து விட்டாயோ, இனிமேல் என்றுமே இங்கே உனக்கு வேலையில்லை" என்று கர்ஜனை செய்தான்.

தாய் வீட்டிற்கு வந்து விளையாட்டுப்போல பதினைந்து நாட்கள் ஆகிவிட்டன. தான் இந்த நிலைமைக்கு ஆளாகிப் போனோமே என்று கொஞ்சம் கூட வருத்தமே இல்லை. விமலா, தன் சிறுவயது

தோழிகளுடன் அடிக்கடி சினிமா போவது; சினிமாக்களைப்பற்றி அரட்டை அடிப்பது என்று ஆனந்தமாகப் பொழுது போய்க் கொண்டிருந்தது விமலாவிற்கு. அவள் தாய் விசாலாட்சிதான் நாள்தோறும் மணிக்கணக்கில் அன்னையிடம் அமர்ந்து – "அன்னையே! விமலா உங்களை எனக்கு அறிமுகம் செய்துவைத்த நல்லெண்ணம் படைத்தவள் அல்லவா? அவள் கணவனுடைய கெட்ட குணத்தை மாற்ற உங்களுக்குக் கணநேரம் போதுமே. இன்னும் ஏன் காலதாமதம் செய்கிறீர்கள்? இப்போது விமலா வீட்டில் இல்லையே என்று இன்னும் அதிகமாகக் குடிக்கிறாராமே என் மாப்பிள்ளை" என்று புலம்பித் தீர்த்து விடுவாள்.

அன்று காலையிலிருந்தே தீபாவிற்கு இலேசாகத் தலைவலி. கூடவே வாந்தியும், ஜுரமும் வேறு. டாக்டரிடம் கேட்டதில் மதியம் 3 மணிக்குமேல் குழந்தையைக் கொண்டுவரச் சொன்னார். "சரி, அம்மா! நீ தீபாவைக் கூட்டிக் கொண்டு போய்விட்டு வந்துவிடு. நான் பக்கத்துத் தியேட்டரில் புதுப்படம் வந்திருக்கிறது – நானும் என் ஃப்ரெண்ட்ஸுமாகப் போகப்போகிறோம். ஆங்! வயிற்றுக்கு என்ன கொடுக்க வேண்டும் என்று மறக்காமல் கேட்டுக்கொண்டு வா" என்று சொல்லிவிட்டுத் தன் தோழியருடன் அளவளாவச் சென்றுவிட்டாள்.

தன் மகளும் தன்னைப்போல வேதனைப்பட்டுக் கொண்டிருக் காமல், மனத்தைத் தேற்றிக் கொண்டுவிட்டாளே என்று பெருமூச் சுவிட்டுக் கொண்டு தன் வேலைகளைத் தொடர்ந்தாள் விசாலாட்சி.

பிற்பகல் 3 மணியளவில் தீபாவை அழைத்துக் கொண்டு டாக்டரிடம் போனாள் விசாலாட்சி. டாக்டர், விசாலாட்சி குடும்பத்திற்கு நன்கு அறிமுகமானவர். "யாரது உங்கள் பேத்தியா, குழந்தையின் அம்மா வரவில்லையா?" என்று கேட்டார் டாக்டர். ''விமலா, அவளுடைய ஃப்ரெண்ட்ஸுகளுடன் சினிமா போயிருக்கிறாள்'', என்ற விசாலாட்சியை ஏற இறங்கப் பார்த்துக்கொண்டே "ம், இந்தக் காலத்துப் பெண்கள் மனப் போக்கே

புரியவில்லை. தன் குழந்தையின் உடல்நிலையைக் கூட கவனிக்கும் அளவு மனநிலை இருப்பதில்லை” என்றார் டாக்டர்.

“ஏன் டாக்டர்! நான்தான் இருக்கிறேனே! இங்கு வந்து பதினைந்து நாட்களாக நான்தானே இவளைப் பார்த்துக் கொண்டிருக்கிறேன். விமலாவின் பெண்மீது என இரட்டிப்புப் பாசம் இருக்காதா என்ன?” என்றாள் விசாலாட்சி. வீடு திரும்பும்போது விசாலாட்சி தீபாவை எடுத்துக் கொண்டு மனதில் விமலாவைப் பற்றி அசைபோட்டுக் கொண்டே வந்தாள். சிந்தனைகள் வேறு கோணத்தில் எழுந்தன விசாலாட்சிக்கு. “அன்னையிடம் வந்தபிறகு மனக்கஷ்டங்கள் வரவே இடம் கிடையாது. அப்படி ஏதாவது இருந்தால் ஏதோ காரணம் இருக்கவேண்டும். விமலாவின் தற்போதைய நிலைமைக்கு அவள் எந்த விதத்தில் பொறுப்பாவாள்?” என்று கேட்டுக் கொண்டே வந்த விசாலாட்சி, தன்னை யாரோ தடுத்து நிறுத்தியது போல ஒருநிமிடம் நின்றுவிட்டாள். அவள் முகம் தெளிவாகி, மனதில் ஓர் உறுதியோடு மேலே நடந்தாள். தன்மனம் தெளிவடைந்த உடனே குழந்தையின் ஜுரம் விட்டுப்போய், பாட்டி எவ்வளவு இதமா இருக்கு இந்த காத்து என்று பேசினாள் தீபா. அதுவரை கண்திறக்காமல் ஜுரத்தில் இருந்த குழந்தையின் நிலையைத் தன் மனநிலையோடு ஒப்பிட்டுப் பார்த்தாள் விசாலாட்சி. உடல் புல்லரித்துப் போய் “அன்னையின் அற்புதமே அற்புதம்” என்று நாத்தழுதழுத்துப் போனாள்.

குழந்தையை இறக்கிக் கீழே விட்டவுடன் கலகலப்பாக விளையாட ஆரம்பித்துவிட்டாள். சூடாகக் காபி கலந்து எடுத்துக்கொண்டு ஹாலுக்கு வரவும், வாசலில் கார்க் கதவைத் திறந்து கொண்டு விமலா இறங்கவும் சரியாக இருந்தது. “அம்மா, படம் ரொம்ப அறுவையாக இருந்தது. பாடல்களும் சுமார்தான். ஆனால் அந்தத் தியேட்டர் சூழ்நிலை எவ்வளவு ஆனந்தமாக இருந்தது தெரியுமா” என்று மாடிக்குப் போனாள் விமலா. அர்த்த புஷ்டியோடு ஹாலில் மாட்டியிருந்த அன்னையின் படத்தை விசாலாட்சி பார்த்தாள்.

‘‘விமலா, முகம் கழுவிக்கொண்டு, வேறு ட்ரெஸ் போட்டுக்கொண்டு கீழே வாயேன்! அன்னையிடம் அரைமணி நேரம் சேர்ந்தாற்போல் நாம் இருவரும் இருப்போம். நாளைக்கு உன் அப்பா டில்லியிலிருந்து திரும்பி வரப்போகிறார். அவர் வந்து பார்த்தால் அன்னை நிகழ்த்தும் அற்புதத்தை அவரால் நம்பவே முடியாது பாரேன்’’ என்று குரல் கொடுத்தாள் விசாலாட்சி.

“இதோ வரேம்மா! நானும் அன்னையைப் பற்றி பத்து நாளாகவே நினைக்கவேயில்லை. என்னவோ, என் மனத்தைப் படித்துப் பார்த்தவள் போல நீயும் கூப்பிடுகிறாய்” என்று கீழே வந்த விமலா, தீபாவை முதன்முதலாகப் பார்ப்பதுபோல, “என்னம்மா சொன்னார் டாக்டர், தீபாவுக்கு என்னவாம்? பரவாயில்லை, நல்ல டாக்டர்தான் ஒரே டோஸ் மருந்தில் கலகலப்பாக ஆகிவிட்டாளே” என்று தீபாவைக் கட்டிக் கொண்டே கேட்ட விமலாவைப் பார்த்து, “அடி பைத்தியக்காரி, டோஸ் கொடுத்தது டாக்டர் இல்லை, நம் கண்கண்ட தெய்வம் அன்னைதான்’’, என்று மனதிற்குள் நினைத்துக் கொண்டாள் விசாலாட்சி.

ஆறரை மணிக்கு அன்னையின் முன் நமஸ்காரம் செய்துவிட்டு பூஜை அறையினின்று வெளியே வந்தனர் இருவரும்.

“விமலா! நான் சொல்லுவதை நல்ல மனநிலையோடு கேட்டுக் கொள். உன்னுடைய இந்த நிலை நீயே வரவழைத்துக் கொண்ட ஒன்றுதான். சமீபகாலமாக உன் போக்கை உற்று கவனித்தாயானால் உனக்கே புரியும். சினிமா, சினிமா என்று எப்பொழுது பார்த்தாலும் இந்தச் சினிமா மோகம் பிடித்து அலைகிறாயே. இந்தச் சினிமாவின் மீது உனக்குள்ள போதைதான் மாப்பிள்ளையிடமிருந்து வெளிப்படுகிறது. அது தெரியாமல் வீட்டைச் சுத்தம் செய்தேன், பேச்சைக் குறைத்தேன், என்று விரக்தியோடு பேசுகிறாய். அன்னையின் கோட்பாடுகளான சுத்தமும், பேச்சுக் குறைப்பும் பலன் தாராமல் போகவில்லை. உன் வீட்டுக்காரருடைய வியாபாரம் அமோகமாகப் பெருகுவதற்கு உன் சுத்தமும், **silence**-உம்

உறுதுணையாக இருந்தன. ஆனால் உன் மனநிலையிலுள்ள சினிமா மோகம்தான் விஷயத்திற்குத் தடை.

"நானே இத்தனைநாள்வரை இது தெரியாத ஜடமாகத்தான் இருந்தேன். டாக்டர் வீட்டிலிருந்து திரும்பி வரும் வழியில்தான் அன்னை இதனை எனக்கு உணர்த்தினார். நான் தவற்றை உணர்ந்த வினாடி, தீபாவின் ஜுரம் இறங்கிவிட்டது. சினிமாவே போகவேண்டாம் என்று சொல்லவில்லை. இன்று பாரேன் தீபாவின் ஜுரம் கூட உனக்குப் பெரியதாகத் தெரியவில்லை'', என்று அன்னையை முன் வைத்துப் பேசி முடித்தாள் விசாலாட்சி.

கேட்டுக் கொண்டே வந்த விமலாவின் கண்களிலிருந்து அருவி புறப்பட்டு அவள் அழுக்குகளைக் கரைத்துக் கொண்டிருந்தன. மீண்டும் பூஜையறைக்குப் போய் அன்னையின் முன் அமர்ந்து, "என் புத்திகெட்டதனத்தை மன்னித்துவிடுங்கள்! எங்கள் கற்பகநிதியான உங்களை வைத்துக்கொண்டே, நானே என் பிரச்சினைகளுக்குக் காரணமாக இருந்து உங்களுக்குத் துரோகம் செய்து கொண்டிருந்தேன். இன்றுமுதல் மாயை அகன்றது. நான் மனம் திருந்த முடிவு செய்து கொள்கிறேன். என்றும்போல என் கூடத் துணை வாருங்கள்" என்று கதறிவிட்டு முகத்தைத் துடைத்துக் கொண்டு வெளியே வந்தவளுக்கு ஆச்சரியம்.

ஹாலில் விளையாடிக் கொண்டிருந்த தீபாவைக் கொஞ்சிக் கொண்டிருந்தான் சுரேந்தர். "என்னை மன்னித்துவிடு விமலா! உனக்கு நான் செய்த கொடுமைகள் ஏராளம். நான் புதிய மனிதனாக மாறிவிட்டேன். இந்தக்கணம் முதல் நம் புதுவாழ்வைத் தொடங்குவோம் வா! நம் வீட்டிற்குப் போகலாம்" என்றான்.

இத்தனை நாள் தவம், கணப்பொழுதில் பலித்ததைக் கண்ட விசாலாட்சி நன்றி சொல்லிக் கொண்டே இருந்தாள்.

❊ ❊ ❊

"Conversation"

பிரார்த்தனை பலிக்க வேண்டும்

அண்ணன் - ஒரு ஜனாதிபதி எலக்ஷனில் அன்னை தேர்ந்தெடுத்த வரை அவரோடிருந்தவர் எவரும் ஏற்கவில்லை. அவர் ஓய்வு பெற்ற **I.C.S.** ஆபீசர். தெலுங்கர், மத்திய மந்திரியாக இருந்தவர். சிந்தாமணி தேஷ்முக் எனப் பெயர். இவரே இந்தியாவின் பெருமையை நிலை நாட்டுவார் என்று அன்னை கூறியபின் அங்கிருந்த சாதகர் பலரும் இவருக்கு 10 ஓட்டும் வாராது என்றனர்.

தம்பி - அன்னை தேர்ந்தெடுத்ததால் அவர் ஜெயிப்பார் என்ற நம்பிக்கை அந்தச் சாதகர்கட்கில்லை

அண்ணன் - அன்னைக்கு **V.V.**கிரியைப் பிடிக்காது. சஞ்சீவி ரெட்டியை நல்லவர் என்றார். ஆனால் கிரி தேர்ந்தெடுக்கப்பட்டார். ரெட்டி 10 வருஷம் கழித்து ஜனாதிபதியானார்.

தம்பி - கிரி ஆசீர்வாதம் கேட்டு, பிரசாதம் வந்தபின் வாங்கி கண்ணில் ஒற்றிக்கொண்டார். ரெட்டியிடம் பிரசாதம் போன பொழுது இதற்கெல்லாம் எனக்கு நேரமில்லை என்றார்.

அண்ணன் - அன்னைக்குப் பிடிக்காது என்றாலும், பிரசாதம் பெற்றவர் ஜெயித்தார். பிடிக்கும் எனினும் பிரசாதத்தை மறுத்தவர் தோற்றார். தேர்ந்தெடுக்கப்பட்டவர் எனினும் அன்னையை அறியாதவர் எதுவும் பெறவில்லை.

தம்பி - தேஷ்முக் எப்படி ஜெயிக்க முடியும்? அவருக்குக் கட்சி பலமில்லையே.

அண்ணன் - அந்தச் சாதகர்கள் போல், நம்மால் அன்னை சொல்லின் சத்தியத்தை ஏற்கமுடிவதில்லை. அன்னை சொல்லி விட்டார், அதனால் நடக்கும் என்ற நம்பிக்கை நமக்குண்டா?

தம்பி - அதுபோல் நம்பினால் நடக்குமா?

அண்ணன் - டிபார்ட்மெண்ட் சரித்திரத்தையே மாற்றி செக்ரட்டிரி, டைரக்டர் உத்தரவை ரத்து செய்தார் ஒருமுறை. அது அன்னை செயல். அப்படி நடந்ததே. நீ உன் வாழ்வில் அதைப் பார்த்ததில்லையா?

தம்பி - பார்த்திருக்கிறேன். ஆனால் அடுத்தமுறை நம்பிக்கை வருவதில்லை. அன்னையோடு 50 வருஷமிருந்தவர்க்கே அந்த நம்பிக்கையில்லை என்றால் நமக்கு எப்படி வரும்?

அண்ணன் - சாதாரண பக்தர்கட்கு அந்த நம்பிக்கையுண்டு. பலிப்பதுண்டு. நெருங்கியவர்கட்கும் அந்த நம்பிக்கையிருப் பதில்லை.

தம்பி - ஏன்?

அண்ணன் - நம்பிக்கை என்றிருந்தால் அது குறையாது. பலனை மட்டும் ஏற்பது நம்பிக்கையாகாது. பலனைப் பார்ப்பவர்கட்கும் நம்பிக்கைக்கும் சம்பந்தமில்லை.

தம்பி - அன்னை சொல் அழியாத சத்தியம் என்று நம்பியவுடன் ஏராளமான தெம்பு வருகிறது என்பது உண்மைதான். அன்னை சொல் தவறுவதில்லை என்று தெரியும், என்றாலும் நம்பிக்கை குறைகிறது.

அண்ணன் - உனக்கு அன்னை ஒரு முறையும் தவறியதில்லை. உனக்கு நம்பிக்கை உண்டு. உண்டு என உனக்குப் புரியவில்லை. **you are unconscious.**

தம்பி - எப்படிச் சொல்கிறீர்கள்?

அண்ணன் - மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டில் உன் எதிரி சாட்சி உனக்கு சாதகமாகச் சொல்லவில்லையா? அது உன் நம்பிக்கையால் நடந்தது.

தம்பி - என் நம்பிக்கையால் நான் என்ன செய்யமுடியும்?

அண்ணன் - ஏன் அது? இதுவரை நடந்ததேயிருக்கிறதே. சட்டம் மாறிவந்து உன் காரியம் 4, 5 முறை நடந்திருக்கிறதே. நம்பிக்கையில்லாமல் அது நடந்திருக்காதே. அன்னையைச் சாதகர்கள் ஆட்சேபித்ததால், தேஷ்முக்கை அன்னை விட்டுவிட்டார்கள். ஆட்சேபித்திருக்காவிட்டால் தேஷ்முக்தான் ஜெயித்திருப்பார்.

தம்பி - அதுவும் நடக்கும் என்று நம்புவது நம்பிக்கை. அதுபோல் ஒன்றைச் செய்ய நான் விரும்புகிறேன்.

அண்ணன் - தானே விஷயம் எழும்பொழுது அதைச் செய்யவேண்டும்.

நாமே முனைந்து செய்தால் சரி வாராது. அப்படிச் செய்வதென்றால் அதைப்பற்றிப் பேசக் கூடாது. விஷயம் தானே வரவேண்டும். அதை வெளியில் சொல்லக்கூடாது. நம்பிக்கையாகச் செயல்பட வேண்டும். தவறாது நடக்கும்.

தம்பி - ஆமாம். சோதனை செய்வது நம்பிக்கையில்லையே. யோசனைசெய்தால் இதுபோல் எவ்வளவோ நடந்திருக்கிறது. நாம் கவனித்தவுடன் சூழல் மாறி சப்பென்றாகி விடுகிறது. பேசுவதென்றால் நாள் கழித்துப் பேசலாம் போலிருக்கிறது.

அண்ணன் - 3 மாதமாக ராவ் என்னை சந்திப்பதில்லை என முடிவு செய்திருக்கிறார். எனக்கு அவரிடம் முக்கிய வேலையிருக்கிறது. நானே போனால் நடக்காது. அவரே வந்தால் முடியும். அது தெரிந்து அவர் வரக்கூடாது என்றிருக்கிறார். இதை நான் வக்கீலிடம் சொன்னேன். அவர் ராவிடம் பேசி அனுப்புவதாகச் சொன்னார். அப்படிப் போனால் காரியம் முடியாது. "உங்களால் அன்னையிடம் சொல்ல முடியுமா?" என்றேன். ஒத்துக்கொண்டார். அன்று மாலை ராவ் வந்தார். விஷயம் முடிந்துவிட்டது. வரக்கூடாது என்ற ஒருவருடைய வைராக்கியத்தை அருள் உடைக்கிறது என்றால், அதனால் எதுவும் முடியும்.

தம்பி - எதுவும் முடியும் என்றால் நமக்கு 1 கோடி பெரிய தொகை. அதைக் கொண்டு வரமுடியுமா?

அண்ணன் - 5000ரூ சம்பளம் 50,000ரூ ஆனதைப் பார்த்தும் கேட்டால் என்ன சொல்வது?

தம்பி - நம்பாமல் கேட்கவில்லை. நம்பவில்லை என்றால் ஏன் கேட்கிறேன்? நம்புவதால்தான் கேட்கிறேன்.

அண்ணன் - இது நடந்தால் என்ன சொல்வார்கள்? உனக்கு அதிர்ஷ்டம் என்பார்கள். இதனால் உனக்கு மட்டும் நம்பிக்கை வரப்போகிறதா? பல காரியங்களைப் பார்த்தும் நம்பிக்கையில்லை என்கிறாயே. விஷயம் நீ மாறுவதிலி ருக்கிறது. **unconscious** ஆக இருக்கிறாய். **conscious** ஆக மாறவேண்டும். நான் உனக்குச் சொல்கிறேன். நானும் உன்னைப்போல் தானிருக்கிறேன்.

தம்பி - சரி, அதிருக்கட்டும். இந்தத் தொகை வருமா?

அண்ணன் - இதுவும் வரும், இதைவிடப் பெரியதும் வரும், உடனேயும் வரும். நம் மன நிலைக்கு வாராது. மனம் மாற வேண்டும். எப்படி மாற வேண்டும் என எனக்குத் தெரியும். சொல்லத் தெரியும். நான் செய்வதில்லை. செய்ய முடிவதில்லை.

தம்பி - காதால் கேட்கலாமே, சொல்லுங்கள்.

அண்ணன் - காதால் கேட்டால், அதனாலேயே பிறகு நடப்பது தடைபடும்.

தம்பி - அப்படி என்றால்?

அண்ணன் - தடைபடும் என்பது சட்டம். சட்டத்தை மீறி நடக்கும் என்பதும் சட்டம். எல்லாம் நம்மைப் பொருத்தது. சோதனை செய்யக் கூடாது. செய்வதானால், முதலில் எதிர்பார்க்கும் மனமிருக்கக் கூடாது. அதாவது மனம் நிதானமடைய வேண்டும்.

தம்பி - பக்குவம் வேண்டும் என்று சொல்லுங்கள். பக்குவம் வந்தால் பிறகு பணம் எதற்கு?

அண்ணன் - பக்குவம் வாராமல் பணம் வாராது. எதுவும் வாராது. பக்குவம் வந்தால் பணமும் வரும், எல்லாம் வரும். இந்த விதிக்கு மாற்றில்லை. எப்படிப் பக்குவம் வரும் என்று வேண்டுமானால் சொல்கிறேன். பிரார்த்தனை ஒரு சமயம் பலிக்கும். பக்குவம் நிரந்தரமாகப் பலிக்கும். ஏராளமாக எதுவும் வரும்.

தொடரும்

* * *

Printed by Mrs. Anuradha Sriram, Integra, No.51, II Cross, Jawahar Nagar, Nellithope Post, Pondicherry-5 and Published by Mr. P.V. Balakrishnan, 177, Pappammal Koil Street, Pondicherry-12 on behalf of The Mother's Service Society, Pondicherry-11.

Editor: Karmayogi

மனம் எதை நம்புகிறது?

மனமே மனிதன். இந்தியாவில் 1971 முதல் வசிக்கும் அமெரிக்கப் பெண்மணிக்கு விசா (visa) வேண்டும். பெண்ணின் மனம் சட்டத்தையும், **document**ஐயும், அரசியல் சிபார்சையும் நம்புகிறது. அன்னையை நம்ப முடியவில்லை.

* 1970இல் புதுவை வந்தவருக்கு ஆசிரமம் visaவுக்கான பொறுப்பை ஏற்றது.
* 1977இல் local politics ஸ்தாபனப் போட்டி விஷயமாக இவர் கணவன் visaவை ஆசிரமம் ரத்து செய்தது, மனைவிக்கும் விசா ரத்தானது.
* 1980 வரை கணவன் visaவை டெல்லி சர்க்கார் ஸ்தாபனப் போட்டியை மீறி visaவை அளித்தது. மனைவி கணவன் visaவால் இந்தியாவிலிருந்தார்.
* இந்நிலைமை '86 வரை நீடித்தது.
* 1986இல் மனைவி அமெரிக்கா திரும்பினார். 1990இல் மீண்டும் வந்தார்.

அன்னைச் சூழலில் வாழ்ந்த பின் அமெரிக்காவில் மூச்சு முட்டுவதைக் கண்டு புதுவை வர மனம் ஏங்கியதால் அவர் ஆத்மா புதுவைக்கு அவரை அழைத்து வந்தது. கல்லூரியில் சேர்ந்து **B.A., M.A., M.Phil.**, பெற்றார். 9 வருஷம் படிப்புக்காக visa நீடிக்கப்பட்டது. இதில் அரசியல் சிபார்சும் கலப்பு. பெண் மனம் சட்டத்தையும், சிபார்சையும் நம்புகிறது. ஆத்மா புதுவையை விழைகிறது. அமெரிக்க வாழ்வு ஆத்மாவுக்குப் புழுக்கமாக இருக்கிறது. **Ph.D.** சேர்ந்தார். இதுவரை கிடைத்ததைப்போல் இதுவும் கிடைக்குமென நினைத்தார். 1½ வருஷம் பாண்டி, சென்னை, டெல்லி என இவரது **file** போவதும், உண்டு எனவும், இல்லை எனவும் மாறிமாறி வருகிறது. மனம் சட்டத்தையும், சிபார்சையும் மட்டும் நம்புகிறது. முடிவில் visa இல்லை என்றாகிவிட்டது. தாய்நாடு திரும்பினார். புது visa கேட்டார். அதற்குரிய documents ஐயும், வேறு சிபார்சையும் எடுத்துப் போனார். மனம் அன்னையை நம்பவில்லை. இவர் உதவியால் visa பெற்ற நம்பிக்கையுள்ள அன்பர் இவருக்காகப் பிரார்த்தனை செய்ய முன்வந்தார். இவர் மனம் அதையும் நம்பவில்லை. ஆனால் மனத்தின் அவநம்பிக்கையால் அதை எதிர்ப்பதில்லை என முடிவு செய்தார். அமெரிக்காவில் 3 மாதத்தில் visa கிடைக்கும் என நம்பினார். visa ஆபீசுக்குப் போனார். **Documents**ஐ எடுத்தார். ஆபீஸ் **documents**ஐப் பெற மறுத்தது. வேண்டாம் என்றனர். 2 மணி கழித்து வரச் சொன்னார்கள். கையில் visa வைக் கொடுத்தனர்!!!

நம்பிக்கையில்லாதவரும், அவநம்பிக்கையை வலியுறுத்தா விட்டால் அருள் ஏதாவது ஒருவகையாக நிச்சயமாகச் செயல்படும்.

ஜுரம்

நான்கு வருஷமாகத் தேங்கிய சரக்கு இனி விலை போகாது என முடிவு செய்தபின், முதலாளியிடம் "உங்கள் பாக்டரியை 2½ வருஷமாகப் பெருக்கவில்லை. முதற்காரியமாக அதைச் சுத்தம் செய்ய வேண்டும். சரக்குக்கு "கவனம்" செலுத்த வேண்டும் "என்று கூறியதை அவர் ஏற்று ஓரளவு அதன்படிச் செயல்பட்டார். 40 லட்ச சரக்கில் 4ஆம் நாள் 1.65, 1.70, 5.00, 8.0 லட்சமென 9 லட்சத்திற்கு மேல் சரக்கு விற்றபொழுது, முதலாளியோ மற்றவர்களோ, இது எப்படி நடந்தது எனக் கேட்கவில்லை. சௌகரியமாக நினைக்கின்றனர். நம்மை வேரோடு அழிக்கப் பிரியப்படுபவரை உலகமே இவரை ஒதுக்கியுள்ளது என்பதையும் மீறி நாம் விரும்பி சேர்த்துக் கொண்டாடும் பொழுது, நம் வீடு அழிய வேண்டும் என தினமும் இவர் செய்த பிரார்த்தனை பலித்து வீட்டில் கோரம் நடந்தபொழுது, ஏன் அன்னை நம்மைக் காப்பாற்றவில்லை என விஷத்தை விரும்பியவரே கேட்கிறார்கள். தவறாதும் கேட்கிறார்கள். தம் செயல் புரிவதில்லை.

Liver ஈரல் கெட்டுப்போனால் மீண்டும் செயல்படாது என்பது தெரிந்த விஷயம். எல்லாச் சட்டங்களையும் மீறிச் செயல்பட்டது. **B.P.** 190 ஆனால் படுக்கையில் உட்காரவும் முடியாது என்பதை மறுத்து ஒரு பர்லாங் நடந்து ஒருவர் ஆஸ்பத்திரிக்குப் போனார். **Sugar** 460 ஆனால் ஆம்புலன்ஸ் வேண்டும். அன்பர் மாறான நிலையைக் கண்டார்.

Brain tumor ஆப்பரேஷன் வெளிநாட்டில் வயதானவர்க்கு நடந்தது. முடிந்தபின் ஜுரம் வந்தது. அது வரக்கூடாது. வந்தால் டாக்டரோ, மருந்தோ செய்வதற்கு ஒன்றுமில்லை. பெண் அன்னையை அறிவாள். பக்தரல்லாத பிறர் அறிவுரையால் பெண்ணும், அவர் கணவனும் அடுத்த அறையில் உட்கார்ந்து அன்னையை அழைத்தனர். அழைப்பு முடிந்து வந்தபொழுது ஜுரமில்லை என நர்ஸ் கூறினார். பெண் சந்தோஷப்பட்டாள். டாக்டர் நர்ஸ் கூறியதை நம்பவில்லை. தாமே வந்து டெம்பரேச்சர் பார்த்தார். ஜுரமில்லை. அவரால் நம்பமுடியவில்லை.

டாக்டருக்கு புரியாமலிருக்கலாம். பேஷண்ட் பக்தராக இல்லாமலிருக்கலாம். அழைப்பு தவறாது. நடக்காது என்பது நடக்கும் என்பது அன்பர்கள் அனுபவம்.

மனதில் கெட்ட எண்ணமிருந்தாலும், நம் மீது கெட்ட எண்ணமுள்ளவர் மீது நல்லெண்ணமிருந்தாலும் தவறாது என்ற அருள் தவறும். நம் நல்லெண்ணம் எதிரியின் கெட்ட எண்ணத்தை வலுப்படுத்தி நடக்கக்கூடாத ஆபத்தை விளைவிக்கும். உடனுள்ளவர் துரோகம் செய்தால், தொடர்ந்த அவர் தொடர்பு ஆபத்தை வரவழைக்கும்.